(24)

# ஹிந்து தர்மம்

மலர் 1 அக். நவ. 1935

இதழ் 4-5


JL
[illegible] 211, N35
N35·1·4-5
1-2215

# ஹிந்து தர்மம்
# हिन्दू धर्म
# Hindu Dharma

மலர் 1 | [illegible] | இதழ் [illegible]


## பல் நோய்களுக்கு [illegible]

## ஆடோமிடின்




பல [illegible] எல்லா நோய்களையும் 'ஆடோமிடின்' [illegible] நிரூபித்திருக்கின்றனர். [illegible]

[illegible] ஆரோக்கிய [illegible]

[illegible] 2

[illegible] மதராஸ் [illegible]

# நிர்வாகஸ்தர் குறிப்புகள்

ஹிந்து தர்மத்தை இன்னும் அதிக பக்கங்கள் உடையதாக்கி, பல சரித்திரங்களுடன், இன்னும் பல அரிய விஷயங்களைக் கொண்டு வெளியிட வேண்டுமென்பது எங்கள் விருப்பம். ஆனால் இவ்வாறு செய்ய விரும்பினால் பத்திரிகையின் விலையை உயர்த்த நேரிடும். ஆனால் நம் வாசகர்கள் விலையுயர்வை விரும்பவில்லை. அவர்கள் பத்திரிகை 1-அணாவுக்கு மேற்பட்டிருப்பதை விரும்பவில்லை. இதனாலேயே நாம் இப்முறை முதல் மூன்று வெளியீடுகளில் வெளியான சரித்திரத்தை நிறுத்திவிட்டு, காகிதத்தையும் கொஞ்சம் விலை குறைவானதாகச் செய்து வாசகர்களின் எண்ணத்தைப் பூர்த்தி செய்திருக்கிறோம்.

சென்னை ஆர்யசமாஜத்தின் வருடாந்தர விழா டிசம்பர் மாதம் 23, 24ந்தேதிகளில் நடைபெறப் போகிறது. அச்சமயம் ஹிந்துதர்ம வாசகர்களின் நன்மையை உத்தேசித்து சென்னை சமாஜத்தின் சார்பாக வெளியிடப்பட்ட எல்லா ஹிந்தி, தமிழ், தெலுங்கு, ஆங்கிலப் புஸ்தகங்களை 100க்கு 25 குறைவு தள்ளி எல்லா ஹிந்துதர்ம வாசகர்கள், சந்தாதாரர்களுக்கும் கொடுக்கப்படும். இந்நற்சமயத்தை வாசகர்கள் பயன் படுத்திக் கொள்வார்களாக.

மற்றும் எல்லா விஷயங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதி தெரிந்து கொள்ளவும்.

காரியதரிசி,

**ஆர்யசமாஜம்,**



ॐ

BEST

# TAILORING

:: CHEAP ::
:: NEAT ::
:: STYLISH ::
:: CUTTING ::
:: AND ::
:: DESIGNS ::

**Quick Delivery.**

PROMPT EXECUTION.

TRY ONCE!

AT

## K. SHIVAJI RAO

AND SON

'GENTS' TAILOR

359, RASAPPA CHETTY ST., P. T., MADRAS

சங்கீத வாத்திய விஷயத்தில் முக்கியமாய் கவனிக்க


# இதோ ஓர் நல்ல தருணம்!



1. தென்னிந்தியாவில் சங்கீத சாமான்கள் சங்கீத விஷயங்கள் தெரிந்தவர்களால் செய்து விற்கப்படவில்லை என்ற குறையை நிவர்த்தி செய்வதாகவே இந்த கம்பெனி ஏற்பட்டுள்ளதாலும்;

2. உயர்ந்த சாமான்களைக்கொண்டு செய்யப்பட்டு நீடித்தகாலம் உத்திரவாதத்துடன் உழைக்கும்படி செய்து கொடுப்பதாலும்;

3. சுத்த சுரங்களோடு செய்து அமைத்துக் கொடுப்பதாலும்;



4. சங்கீத வாத்திய விஷயத்தில் 15 வருடங்களாக மிகவும் தேர்ச்சி பெற்று தென்னிந்தியாவிலும் மேல் நாடுகளுக்கும் (அமெரிக்காவுக்கும்) 22 தமிழ் வாத்தியங்களை செய்து அனுப்பி பிரக்கியாதி பெற்ற பிரபலர் (R.S. Money) ஆர். எஸ். மணி அவர்களால் எங்கள் கம்பெனியில் செய்யப்பட்ட வாத்தியங்களை பரிசீலனை செய்து கொடுப்பதாலும்;

எங்கள் கம்பெனிக்கு எழுதி தங்களுக்கு வேண்டிய சாமான்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

## Musical Emporium

"ஷாஜி மஹால்"

537, திருவல்லிக்கேணி, :: :: மதராஸ்.


## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| டைடல் | முன் பக்கம் | ரூ. 7-8-0 |
| ,, | பின் பக்கம் | ,, 15—0—0 |
| ,, | உள் பக்கம் ஒன்றுக்கு | ,, 10—0—0 |
| ,, | முழுப்பக்கம் ஒன்றுக்கு | ,, 5—0—0 |
| ,, | அரைப்பக்கம் ஒன்றுக்கு | ,, 3—0—0 |

வருடமுழுவதற்கும் விளம்பரம் செய்பவர்களுக்கு 10சத வீதம் குறைக்கப்படும்.

விவரங்களுக்கு எழுதுக:—

மானேஜர்,
ஹிந்து தர்மம், சென்னை.

# "ஹிந்து தர்மம்"

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற் கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் .... | ரூ. 1-0-0 |
| | பினாங்கு, சிங்கபூர், தென் ஆபிரிகா, பஸரா, பாக்டாட், மெஸபொடோமியா, முதலிய வெளிநாடுகளுக்கு | 2-0-0 |

நடந்துக் கொண்டிருக்கிற மாதத்திய தனிச்சஞ்சிகை விலை. 0-1-3

(1) சந்தாதாரராய் சேருகிறவர்கள் பூர்ணமாகப் பெயரையும், விலாசத்தையும் எழுதியனுப்ப வேண்டும.

(2) சந்தாத்தொகையை முன்னுடியே செலுத்தியாவது அல்லது, வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட இதழ் முதலிலிருந்து கணக்கு வைக்கப்பட்டு, இதழ் முதற்கொண்டு அனுப்பப்படும்.

(3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போருக்கு ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணாவோடு, மணியார்டர் கமிஷன் 2 அணா வி. பி. தபால் சார்ஜ் 6 பை. ஆக 0-5-6 அதாவது. 6 அணா சேர்த்து ஆக மொத்தம் 1-6-0 ஆகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் 1-2-0 அனுப்பிப்பத்திரிகைப் பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் 15 நாள் வரையில் பார்த்து அதற்குமேல் அவ்விவரத்தைத் தெரிவித்தால் மறுபடியும் சஞ்சிகை யனுப்பக்கூடும், பிறகு தெரிவிப்போர் கிரய மனுப்பி பெறவேண்டும்.

(5) விலாசம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாஸத்திற்குச் சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துக் கொண்டு எங்களுக்கு புது விலாஸத்தை யறிவிக்க வேண்டும்., இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாங்கள் பொருப்பாளிகளல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல் பொருப்பாளிகளல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது அனுப்பினால் நாங்கள் பதிலை அன்றி விடையளிக்கப் படமாட்டா.

# பொருளடக்கம் :

—— ✳ ——


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | வேதமந்திரத்தின் வியாக்கியானம் | .... 143 |
| 2. | வினாவிடை | .... 145 |
| 3. | மஹரிஷி தயானந்தரின் சீடர் | .... 149 |
| 4. | வேதங்களின் மகிமை | .... 151 |
| 5. | ஆர்யசமாஜமும் டாக்டர் அம்பேத்காரும் | .... 155 |
| 6. | பண்டித மாமசந்திரரும் பசுபலியும் | .... 159 |
| 7. | பால்ய மணத்தின் தீங்குகள் | .... 164 |
| 8. | ஆர்யசமாஜம் என்பது என்ன ? | .... 167 |
| 9. | மதங்களின் தலைமை ஊற்று | .... 172 |
| 10. | ஹரிஜனங்களும், மதமாற்றமும் | .... 175 |
| 11. | உண்மைச் சம்பவக் கதை | .... 178 |
| 12. | சென்னை ஆரியசமாஜம் | .... 182 |


## ஆசிரியரின் வேண்டுகோள்.

இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் வசிக்கும் ஹிந்து மதாபிமானிகளையும், தேசாபிமானிகளையும் முக்கியமாய் தமிழபிமானிகளையும், "ஹிந்து தர்மம்" என்கிற நமது பத்திரிகைக்கு விஷயதானம், எழுதி அனுப்பும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறோம். விஷயதானம் விஷயங்களை வளர்த்தாமல் சுருக்கமாகவும், தர்மத்திற்கு முரண் ஆகாத தன்மையிலுமிருக்கவேண்டும். வெளிநாடுகளில் உள்ளோர் மதசம்பந்தமாக நேரும் அநுபவங்களையும், அன்னியமத ஆராய்ச்சியினால் உண்டான அனுபவங்களையும் எல்லோருக்கும் முக்கியமாக ஹிந்துக்களுக்கு ஓர் உணர்வை ஊட்டும்படி இருத்தல் வேண்டும்.

"ஹிந்து தர்மத்தின்" ஆசிரியர் மேல்கண்டவாறு விஷயதானம் செய்பவர்கள் வியாசம், கடிதம் முதலியன எழுதுவோர்களுடைய அபிப்பிராயங்களுக்கு எவ்விதத்திலும் உத்திரவாதியாகமாட்டார்.

பிரிட்டிஷ் காலனிகளிலும், மற்றைய வெளிநாடுகளிலும் உள்ள இந்தியர்கள் ஜீவிக்கும் தன்மை முதலியவைகளை புகைப்படம் எடுத்து நமக்கு அனுப்புவதோடு சுருக்கமான விவரங்களும் கொடுத்தனுப்பவேண்டும். அவைகளை மிக வந்தனத்துடன் பெற்று, அவைகளை பிரசுரிக்கும்படி ஏற்பாடுசெய்வதுடன் அவற்றிற்கு கிரயமும் அளிக்கத்தயாராக விருப்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

E. S. R.

# ஹிந்து தர்மம்

## ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

"The Vedic religion was the only one, the development of which took place without any extraneous influences, while, even in the religion of the Hebrews, Babylonian, Phonician and at a later time Persian influences, have been discovered."

Professor MAX MULLER, in his "India what can it teach us?" P. 129.

"நஹி ஸத்யாத்பரோ தர்ம:"

"சத்தியத்தைப் பார்க்கிலும் மேலான தர்ம மொன்றில்லை"


ஈ. எஸ். ரங்கசுவாமி— ஆசிரியர்.

| மலர் 1 | யுவஹூ—புரட்டாசி-ஐப்பசிமீ<br>அக்டோபர்—நவம்பர்—1935ஹூ | இதழ் 4 & 5 |
|---|---|---|


## வேத வியாக்யானம்

"ஓம் அக்னே வ்ரதபதே வ்ரதம் சரிஷ்யாமி தச்சகேயம் தன்மே ராத்யதாம் இஹமஹமன்ருதாத் சத்யமுபைமி" || வேதம் ||

பொருள் :—ஓம் - முத்தொழிற் றலைவா!; வ்ரதபதே - சகல விரதங்களின் (நற்குணங்களின்) பதியான (ஆதாரபூதனான); அக்னே! - ஒளிகளுக்கு ஒளியானவனே—பரமனே!; அஹம் - நான்; தத் - அந்த உன்; வ்ரதம் - விரதங்களை; சரிஷ்யாமி - என் ஒழுக்கமாகக் கொண்டொழுகிவருகிறேன்;

சகேயம் - அதனாலாகும் எல்லாவற்றையும் சகித்துக்கொள்வேன் ; இதும் - இப்போது, இங்கு ; அன்ருதாத் - பொய்யிலிருந்து ; சத்யம் - உண்மையில் ; உபைமி - ஆஸ்ரயமடைகிறேன்.

**கருத்து :—** உலகில் எக்காரியத்தையாயினும் முடிவுவரை சாதிக்கவிரும்பும் ஒவ்வொருவருக்கும் வேண்டியதொன்றுண்டு. அது விரதம்-திட வைராக்யம். வைராக்யமற்ருேர் எக்காரியத்தினையும் சாதிக்கமுடியாது. வைராக்யம் என்பது எடுத்த காரியத்தை சாதிப்பதில் எவ்வித துன்பங்கள் நேரிடினும் சகித்துக்கொள்ளல் ஆகும். ஆனல் இவ்வாருன திடவைராக்யத்தை யடைந்து காரியசித்தி பெற விரும்புபவர்கள் முதலில் அனுசரிக்கவேண்டியது சத்யம். பொய்யில் திடம்கொள்பவன் காரியசித்தி யடையமாட்டான். ஆகையால் முதலில் தான் எடுத்த காரியம் சத்தியமானதுதானு என்பதை நிச்சயித்துக் கொள்ளவேண்டும்.

எல்லாம் வல்ல பரமன் சத்ய நற்குணப் பொக்கிஷன். அவனின் அருளைப் பெற விரும்பியவனும் அச்சத்திய நற்குணத்தை மேற்கொள்ளவேண்டும். அதற்கு பௌதிகப் பொருள்கள் உதவியளிப்பினும் பரமனின் உதவியன்னியில் அவனின் எண்ணம் ஈடேறுவதில்லை. ஆகையால் உலகில் உண்மைச் சுகத்தைப்பெற விரும்பும் மாணவன் தான் சத்தியத்தை திடமாகக்கொண்டு நற்குண விரதத்தை அனுசரிக்க அந்நற்குணங்களின் பொக்கிஷதாரனை பரமனை வேண்டி அவனின் குணங்களில் ஆழ்ந்து தன் காரியசித்தியைப் பெறுகிருன் இதுவே இம் மறைமொழியின் உண்மைப்பொருள்.

சென்னை-600 00
162215

---

**நாம் எப்பொழுதும், கண்டுகொண்டவுடன், உண்மையைக் கைக்கொள்ளவும், பொய்யை விட்டு விடவும் தயாராக யிருக்கவேண்டும்.**

# வினவிடை *

(ஸ்ரீ. பண்டிட் கே. ஞானி.)

## 1. ஆரியசமாஜம் ஓர் புதிய மதமா?

ஹரிஜனத்தலைவர் டாக்டர் அம்பேத்கார் இந்துமதத்தை விட்டுச் செல்லப்போவதாக வதந்தி உண்டானவுடன், மகம்மதியர், கிருஸ்தவர், பௌத்தர் முதலானவர்கள் தங்கள் தங்கள் மதத்தில் வந்துவிடும்படி அவரைக் கேட்டுக்கொண்டிருப்பதைப் போலவே ஆரியசமாஜிகளும் தங்கள் சங்கத்தில் சேர்ந்துகொள்ளும்படி கேட்டிருந்ததை பத்திரிகை வாயிலாக நாம் அறிகிருேம். இதன்பேரில் சிலர் ஆரியசமாஜம் மகம்மதிய, கிருஸ்தவ மதங்களைப்போன்று ஓர் தனிப்பட்ட மதமோ என்று ஐயுறுகின்றனர். அவர்களின் சந்தேகத்தை விலக்குவோம்.

உண்மையில் ஆரியசமாஜம் ஓர் புது மதமல்ல. ஆரியசமாஜம் ஜாதிபாகுபாடு, விக்ரஹ ஆராதனை, உயர்வு தாழ்வு, வர்ணபேதம், அவதாரம் முதலியவைகளில் நம்பிக்கை கொள்வதில்லை. ஆனல் ஆரியசமாஜம் மனித சமூகத்தின் பழைய அறிவுப் பொக்கிஷங்களான வேதங்கள், உபனிஷத்துக்கள், ப்ராம்மணங்கள், கீதை முதலான நூற்களை நம்புகின்றது. கடவுள், ஜாதி ஒன்றே என்றும் நம்புகின்றது. அவைகளுக்குத்தகவே தன் கொள்கைகளையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. வேதங்களுக்குப் புறம்பான ஒன்றையும் ஆரியசமாஜம் நம்புவதில்லை. ஆகையால் ஆரியசமாஜம் உண்மையில் ஓர் புதிய மதமல்ல.

ஆனல் பின் ஏன் ஆரியசமாஜிகள் அம்பேத்காரை தங்களுடன் சேர்ந்து கொள்ளும்படி கேட்க வேண்டும்? காரணம், அம்பேத்கார் ஹிந்துமதத்தில் ஜாதிப் போராட்டங்கள் இருப்பதைக்கண்டு வெறுப்படைகிருர். ஆனல் அதே ஹிந்து சமூகத்தின் ஓர் பிரிவினரான ஆர்யசமாஜிகள் அப்போராட்டத்தை அறவே ஒழித்துவிட்டனர். இன்னும் அம்பேத்கார் விரும்புவது

---

* இத்தலைப்பின் கீழ் "ஹிந்து தர்ம" வாசகர்களின் கேள்விகளுக்கு விடையளித்துக்கொண்டுவரப்படும். ஆகையால் வாசகர்கள் தங்களின் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள முன்வருவார்களாக.

எதுவோ அது ஹிந்து சமூகத்தின் ஓர் கூட்டமாகிய ஆரியசமாஜத்தில் இருக்கிறது. ஆகையால் அவரை அந்நியமதம் எதற்கும் செல்லமாட்டாமற் தடுத்து ஹிந்து சமூகத்திலேயே அவருக்கு விருப்பமானபடி சீர்திருத்திய கொள்கையையுடைய சமாஜத்தில் சேர்ந்து உழைக்கும்படியே சமாஜிகள் அவரை அழைக்கின்றனர்.

ஆர்யசமாஜஸ்தாபகரான தயானந்த ஸரஸ்வதியவர்கள் தன் சத்தியார்த்தப் பிரகாசம் எனும் நூலில் கீழ்கண்டவாறு சொல்கிறார். "நான் யாதொரு புதிய மதத்தையும் உண்டாக்க இச்சித்தாவது விரும்புகிறேனில்லை. உண்மையான சநாதனதர்மம் தற்காலம் பலகாரணங்களால் பலவிதங்களான சீர்கேடுகளையடைந்திருக்கிறது. அதை விளக்கிக்காட்டி அக்கேடுகளை நீக்கி மறுபடியும் பரிசுத்தமாக பழங்காலத்திய மதத்தை அப்படியே புதிப்பிக்கத்தான் நான் விரும்புகிறேன்" என்று சொல்கிறார். இதையறிந்தவர்கள் ஒருபோதும் ஆரியசமாஜம் ஓர் தனிப்பட்ட மதம் என்று சொல்லத்துணியார்.

## 2. ஹிந்துக்கள் ஏன் அன்னிய மதங்களைத் தழுவுகின்றனர்?

ஓர் பக்கத்தில் மேல் நாட்டு எழுத்தாளர்களில் சிலர் "ஹிந்து தர்மம் மூடக்கொள்கைகள் நிறைந்துள்ளது" என்று எழுதுகின்றனர். மற்றோர் பக்கத்தில் மகம்மதிய, கிருஸ்தவப் பிரசாரகர்கள் "ஹிந்து மதம் நியாயவிரோத, யுக்திப்பொருத்தமற்ற கொள்கைகளையுடைய மதம்" என்று பிரசாரம் செய்து கொண்டு வருகின்றனர்.

மகம்மதிய, கிருஸ்தவ மதத்தினர் முறையே மசூதி, சர்ச்சுகளில் வாரா வாரம் தங்கள் மதத்தைச் சேர்ந்த எல்லோரையும் வரவழைத்து மதாபிமானத்தைப் புகட்டுகின்றனர். தங்கள் மதத்தின் பெருமைகளையும், அன்னிய மதங்களின் சிறுமைகளையும் விளக்கிக் காட்டுகின்றனர். மதம்-தர்மம் என்பதே மனிதனின் பிறவிப் பயன் என்பதையும், மதத்திற்கு அவமானம் நேரிடுவதைக் காண்பதிலும் உயிரை மாய்த்துக்கொள்ளல் நல்லது என்றும் போதிக்கின்றனர். ஒற்றுமையின் பயனை விளக்கிச்சொல்லி நடைமுறையில் அதை அநுசரிக்கச் சொல்கின்றனர். தங்கள் மத சித்தாந்தங்களை யுக்திக்குப் பொருத்தமான முறையில் கேட்பவர்களின் சந்தேகங்கள் விலகும் வண்ணம் அர்த்தம் செய்துச் சொல்லி தங்கள் மதத்தினரை திருப்திசெய்விக்கின்றனர்.

இந்துக்கள் எப்போதும் ஒரு இடத்தில் கூடி தங்கள் மதக்குறைவுகளை ஆலோசித்துத்தீர்த்துகொள்வதில்லை. எதையும்-நடைபெற முடியாத எதையும்-



மந்த்ர சக்தி என்ற முறையில் நம்பிவிடுகின்றனர். ஒரே விஷயத்திற்குப் பலர் பல விதங்களாக வியாக்யானம் செய்கின்றனர். திருப்தியையளிக்காத முறையில் சித்தாந்தங்களை விளக்குகின்றனர். காலத்திற்குத் தக தங்கள் ஆசாரங்களை மாற்றிக்கொள்ளாமல் "பழைய வழக்கம்" என்ற ஒரே காரணத்தைக்கொண்டு சவயுக வெள்ளத்தில் மூழுகிக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வழிகளில் ஒரு திருப்தியும் அடையாது சந்தேக உள்ளத்தினர்களாக, தங்கள் மதப்பெருமைகளை யறியாதவர்களாக இருக்கும் ஹிந்துக்களுக்கு மற்ற மதத்தினர் திருப்தியான விதத்தில் உபதேசம் செய்யும்போது ஹிந்துக்கள் அதை நம்பி அவர்களின் வழிச் செல்லத் தொடங்குகின்றனர். இதுவே ஹிந்துக்கள் அந்நியமதங்களுக்குச் செல்லும் காரணம். மற்றும் இந்து மதத்திய ஆர்த்த மற்ற ஜாதிபேதத்தால் சகாயம் கிடைக்காமல் தவிப்பவர்களுக்குச் சகாயம் கிடைக்குமென்றும் அந்நியமதங்களைத் தழுவுகின்றனர். அந்நிய மதத்தினரின் வெளிப்படை யொற்றுமையைக் கண்டு வியந்து தழுவுகின்றனர்.

இந்து மதத்தினர்களை அந்நிய மதங்கள் செல்லவொட்டாமற்றடுத்துக் காப்பாற்ற விரும்புபவர்கள் இந்து மத சீர்திருத்தம் செய்யவேண்டும். அவ்வாறு சீர்திருத்தப்பட்ட சபையே ஆரீய சமாஜம்.

## 3. ஹரிஜனங்கள் ஆரியர்களல்லவா?

சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் சொல்கின்றனர்:—ஒரு காலத்திலே ஆசியா கண்டத்திலே யிருந்து "ஆரியர்" என்ற சிலர் இந்து நாட்டில் குடியேறினர். அப்போது அங்கே "திராவிடர்" என்ற மக்கள் வசித்திருந்தனர். வந்த ஆரியர் தங்களை ஆரியர் என்றும் மற்றவர்களை அநாரியர் என்றும் சொல்லிக்கொண்டு மிலேச்ச, நியாய முதலான பெயர்களால் அழைத்தனர். இவ்வாறு ஏற்பட்ட பிரிவுகள்தான் வர வர கணக்கற்ற ஜாதிபேதங்களாக மாறின.

சரிதான். இருக்கட்டும். இது எல்லாமும் உண்மையாகவோ, முழுப் பொய்யாகவோ எப்படியாவது இருக்கட்டும். ஓ ஹிந்துக்களே! தற்காலத்தில் நம் ஹிந்து சமூகத்தின், நாட்டின் நிலையென்ன? நமக்குள் எவ்வளவோ பேதங்கள் இருப்பதாக நாம் ஒவ்வொருவரும் நினைத்துக் கொண்டிருந்த போதிலும் நாம் எல்லோரும் தற்காலம் ஒரேவித மார்க்கத்தில்தான் சென்று கொண்டிருக்கிறோம். ஒரேவிதமான இன்பதுன்பத்திற்காளாகின்றோம். தற்காலம் நம் உயர்வு தாழ்வுகள் நமக்கு அழிவை உண்டுசெய்கின்றனவே தவிர

சுகத்தையும் நமக்குச் செய்யவில்லை. நாம் எல்லோரும் எல்லாபேதங்களையும் மறந்து ஒற்றுமைப்பட்டாலன்றி நாம் ஒன்றும் செய்ய முடியாது. எல்லா விதங்களான வித்தியாசங்களையும் அறவே ஒழித்து ஒன்று சேருவோம் வாரீர்!

எல்லோரும் ஒன்றே. சிறிதும் பேதம் கிடையாது என்று சொல்லும் சமாஜம் ஹரிஜனங்கள் 'ஆரியர்' அல்ல என்று சொல்லுமா? ஒருக்காலு மில்லை.

## 4. மஹாத்மா காந்தி ஆரிய சமாஜியா?

ஆரியசமாஜம் "அஹிம்ஸா தர்ம"த்தை நம்புகின்றது. காந்தியார் அஹிம்சா தர்மப் பிரசாரம் பூர்ணமாக உலகிற்கு போதிக்கிறார். ஆரியசமாஜம் ஹிந்துக்கள் அந்நிய மதங்களைத் தழுவுவதை விரும்புகிறதில்லை, தடுக்கவும் பாடு படுகிறது. காந்தியாரும் ஹரிஜனப் பத்திரிகைவாயிலாக பாதிரியார்கள் செய்யும் பிரசாரத்திற்கு வருத்தம் காட்டி மதமாற்றுதலின் குற்றத்தையும் விளக்கிக்காட்டுகிறார். ஆரியசமாஜம் கலப்பு மணத்தை ஆதரிக்கிறது. காந்தியார் தன் புத்திரன் தேவதாஸ் காந்திக்கு பிராம்மணப் பெண்மணியை விவாகம் செய்துவைத்தார். பால்யவிதவைகள் மணத்தை ஆரியசமாஜமும் காந்தியாரும் ஆதரிக்கின்றனர். தீண்டத் தகுந்தது தகாததென்பது ஆர்யசமாஜ சித்தாந்தத்திற்கிடையாது. இருப்பதை ஒழிக்க காந்தியார் உழைத்துவருகிறார். ஆனாலும் காந்தியார் ஆரியசமாஜப் பேரேட்டில் தன் பெயரை பதிவு செய்து கொள்ளவில்லை.

ஆரியர் என்றால் ஸ்ரேஷ்டமானவர், புத்திசாலி, சத்யவாதி என்று பெயர்.

## 5. இட்டலி அபிசீனிய யுத்தத்தில் பாரதம் என்ன செய்யவேண்டும்?

பௌத்தகால இதிகாசத்தில் ஓர் அரசன் தன் புத்திரன், புத்திரியை தர்ம சேவைக்காக, என்றால் அஹிம்சை, சர்வாங்க அன்பு முதலியவைகளை பிரசாரம் செய்வதற்காக மேல்நாட்டிற்கு அனுப்பிவைத்ததாகக் காணப்படுகிறது. தற்காலத்தில் முசோலினிப் பெரியார் தன் குமாரனை அபிசீனியாமீது குண்டுமாரி பொழிவதற்காக அனுப்பிவைக்கிறார். காரணம் என்ன? தற்கால மக்களின் உள்ளத்திலே சர்வாங்க அன்பு இல்லாமையே. ஆகையால் சர்வாங்க அன்பினிருப்பிடமான பாரதம் விதேசங்களில் அவ்வன்பு ஒளியைச்செலுத்த பிரசாரம் செய்யவேண்டுவதவசியம்.



சர்வதேச சங்கம் இத்தாலியின்மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்க முயற்சி செய்கிறது. ஆயுதத் தடையை பிரயோகிக்கிறது. இவைகளால் உலக சமாதானம் ஏற்படக்கூடுமென்று பாரதம் நினைக்கவில்லை. ஏனென்றால் சமாதானமும் கலகமும் பௌதிகப் பொருள்களில் இல்லை. அது மக்களின் மனதிலே இருக்கிறது, மக்களின் மனம் சமாதானத்தின் பெருமையையறிந் தொழுக முயற்சிக்காதவரை சமாதானமெவ்வாறு ஏற்படக்கூடும்? சமாதானம் சர்வாங்க அன்பாலும், அஹிம்சா தர்மத்தால் மட்டுமே ஏற்படக்கூடும்.

முசோலினிபோன்ற தலைவர்கள் தற்காலம் தங்களைப்பின்பற்றுவோர் களுக்குக் கேவலம் தங்கள் புஜபலங்களால் மற்றவர்களை வெல்லும் மார்க்கங்களையே பிரசாரம் செய்து வருகின்றனர். அப்பேர்ப்பட்டவர்களின் உள்ளங்களில் கேவலம் தாங்களே எல்லா இன்பங்களுக்கும் அதிகாரிகளாக வேண்டுமென்ற கருத்தே குடிகொண்டிருக்கிறது. அதற்காக அதை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்ற வைராக்யத்தால் அவர்களின் உள்ளங்கள் யுத்த போதையில் மயங்கியிருக்கிறது. ஆனால் அப் போதையின் பயன் கேவலம் அவர்கள் நாடுவரை துன்பமளிப்பதில்லை. ஆனால் உலகமெல்லாவற்றிற்குமே அது பாதிக்கிறதென்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகையால் பாரதம் செய்யவேண்டியதெல்லாம் சர்வாங்க அன்பு, அஹிம்ஸா பிரசாரம் ஆகிய மாற்றையளித்து அப்போதையைத் தணிக்கவேண்டும். ஆனால் அது எவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டுமென்ற விஷயங்கள் அரசாங்க சம்பந்தமுடையவைகள் ஆனதினால் ஆரியசமாஜம் அவைகளுக்கு விடையளிக்கத் தயாராயில்லை.

---

# மஹரிஷி தயானந்தரின் சீடர்.

(ஸ்ரீமான் ராஜாதிராஜ் ஸ்ரீ உம்மேதசிம்ஹஜீ பஹாதுர், ஸஹபுராதீச.)

(குறிப்பு:—இவ்வியாசத்தை எழுதியவர் ஸஹபுரத்தின் அரசர். ஸ்வாமி தயானந்தரிடம் நேர் முகமாக பாடம் கற்று தன் சந்தேகங்களனைத்தும் அறவே விலகப்பெற்று மனோவாக்குக் காயங்களால் தயானந்தரைப் பின்பற்றி வரும் பெரியார். ஆரிய அரசர் என்ற முறையில் தன்னதிக்கத்துக்குட்பட்ட எல்லா விடங்களிலும் தினமும் வேள்வி புரிந்துவரச்செய்த உத்தமர். தீபாவளி தினத்தில் தயானந்தரின் அன்பின் அறிகுறியாக அவர் ஓர் வியாசம் எழுதினார். ஹிந்து தர்ம வாசகர்களுக்காகவென்று அதை கீழே தமிழில் மொழிபெயர்த் தளிக்கிறோம்).

மனிதர்கள் வாழ்க்கையை பலனுடையதாகச் செய்து கொள்ளவேண்டுமென்றால் ஏதாவதொரு மஹாபுருடனை பின்பற்றவேண்டும்; என்றால் அவரின் சித்தாந்தங்களை அனுசரித்து வரவேண்டும். ஆனால் அச்சித்தாந்தங்களில் பூர்ணமான திட வைராக்யம்கொண்டு தன் இஷ்ட மித்ர பந்துக்களையும் அவ்வழியில் சேர்த்துக்கொள்பவர்களே உண்மையில் பலனையடைபவர்களாவார்கள்.

ஸ்வாமி தயானந்தர் சிறிதாயினும் ஓர் புதிய மதத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று விரும்பினாரில்லை. அவர் உலகத்திற்கெடுத்துக் காண்பித்தவைகள் எல்லாம் உலக சம்மதமான, மனித சமூகத்திற்கே பழமையான, பரிசுத்த வைதிகக் கட்டளைகளேயாகும். அவைகள் சிலகாலம் வரை மறைந்து கிடந்தனவாதலால் தற்கால உலகம் அவைகளைப் புதியவைகளைப்போல் காண்கின்றது.

மஹரிஷி அம்மறைந்து கிடந்த உத்தம சித்தாந்தங்களை மறுபடியும் உலக வெளிப்படையாக்கினார். அதனாலேயே ஆசார்யர், ஜகத்குரு, வழிகாட்டி என்ற பெயர்களையடைந்தார். அவரின் சித்தாந்தங்களை யனுசரிப்பவர்களே அவரின் சீடர்களாவார்கள்.

அம்மஹாத்மா (தயானந்தர்) உலகத்திற்கு ஒரு கடவுள், ஒரு கிரந்தம், ஒரு தர்மம், ஒரு ஜாதியை நினைப்பூட்டினார். சத்ய ஆகார, சத்ய ஒழுக்க விதிகளின் மேன்மையை விளக்கிக் காட்டினார். வம்ச விருத்திக்காகவும் மக்களின் நன்மைக்காகவும், ஸ்வபாவத்தின் சுத்தத்திற்காகவும், நல்லொழுக்கங்களின் மேன்மைக்காகவும் 16 சடங்குகளை (சம்ஸ்காரங்களை) வெளியாக்கினார்.

பலஹீன, உதவியற்ற, மயக்கமுற்ற ஜீவன்களுக்காகவென்று மறுபடி புராதன சித்தாந்தமாகிய சுத்திச் சடங்கை நிருவி வைதிக தர்மத்தின் மகத்வம், உதாரகுணம் இவைகளைத் தன் சீடர்களின் உள்ளத்தில் பதிப்பித்தருளினார்.

மற்ற ஆசார்யர்களைப்போல் தன்னை தேவகுமாரன், தேவதூதன், தைவிக சக்தியென்று சொல்லி மக்களால் பூஜிப்பைப் பெற்றாரில்லை. மடங்கள், மந்திரங்களின் சுகத்தையும் விரும்பினாரில்லை. தன்வரை வேதமாணுக்காயிருந்து உலக நன்மை புரிதல் கடமையெனக்கொண்டு உலகுக்கு சுத்த வைதிக மார்க்கத்தில் வேண்டிய உபதேசங்களைப் புரிந்தருளினார்.

ரிஷியின் மாணவர் ஏதாவதொரு சபைக்குப் பூஜையானாகவோ, ஏதாவதொரு அரங்கேற்று நூலுக்குக் கர்த்தாவாகவோ, ஏதாவதொரு ஜாதிக்குத் தலைவராகவோ இருக்கமுடியாது. ஆனால் ஒரே கடவுளின் உண்மைப் பக்தராய், வேதத்தைத் தொடர்பவராய், சதாசாரத்தைக் கொண்டவராய், சம்ஸ்காரங்கள் செய்துகொள்ளப் பெற்றவராய் உலக அன்பைக் கொண்டவராய் இருப்பவரே மஹரிஷி தயானந்தரின் சீடராகும். உலகம் அவரின் சித்தாந்தங்களைப் பின்பற்றுமாக.

சாந்தி: சாந்தி: சாந்தி:

# வேதங்களின் மகிமை.

(ஸ்ரீ பண்டித சூர்யதேவ சர்மா சித்தாந்த சாஸ்த்ரீ;
சாஹித்யாலங்கார், எம்.எ., எல்.டி,)

## விஞ்ஞானமும் அத்யாத்மமும்.

“உலகத்தை அரசாள்வது ஆராய்ச்சியே” என்றார் ஒரு பெரியார். தேசத்தின் உத்தமப் பெரியோர்கள் தங்களின் ஆராய்ச்சி முடிவை எவ்வழிச் செலுத்துகின்றனரோ அவ்வழியையே சகல மக்களும் பின்பற்றுகின்றனர். தற்காலப் பெரியோர்களுடைய ஆராய்ச்சி முடிவு எவ்வழிச் சென்றுகொண்டிருக்கின்றதெனப் பார்ப்போம். ஓர் பக்கத்தில் விஞ்ஞானிகளின் திறமையால் உண்டாக்கப்பட்ட நவீனங்கள் பௌதிகவாதிகளின் உள்ளங்களை வியப்புக் கடலில் ஆழ்த்தியிருக்கின்றன. அதே நவீனங்கள் அத்யாத்மவாதிகள் முன் விளையாட்டுக் கருவிகளைப்போல் பாவிக்கப்படுகின்றன. இவ்வத்யாத்ம வாதிகள் விஞ்ஞான உலகில் கூட ஆத்மீகத்தை முத்திரையிட்டிருக்கின்றனர். சிகாகோ சர்வ கலாசாலையில் பெயர் பெற்ற ப்ரொபஸர் ப்ரௌட்ஸ் என்பார் தன் 65 வருட அநுபவத்திற்குப் பின் எழுதுகிறார்:—There is a purposeful operation of Nature, when you accept this, it seems to be inconsistent with the Physical sciences not to believe in a mind.

என்றால் இயற்கையில் ஏதோ சேதன சக்தி இருப்பது நிச்சயம். அதை ஒப்புக்கொள்ளாமை பௌதிக சித்தாந்தங்களை அவமதிப்பதாகும். தர்மம் சேர்க்கப்படாத பௌதிக விஞ்ஞானம் உபயோகமற்றதாகும். இங்கிலாந்தின் பிரசித்த விஞ்ஞானி ஸர். ஆலிவர் லாட்ஜ் என்பார் எழுதுகிறார்:— The true science and the true religion are the twin sisters, and their separation is sure to prove the death of either.

என்றால் சத்தியமான விஞ்ஞானமும் சத்தியமான தர்மமும் இரட்டைச் சகோதரிகளாகும். இவர்களைப் பிரித்தால் நிச்சயமாய் நாசம் ஏற்படுவதாகும்.

ஆனால் அவ்வாறான விஞ்ஞான யுக்தமான தர்மம் நமக்கெங்கு கிடைக்குமென்பதை யாராய்வோம்.

## தர்ம விக்ஞான சம்பந்தம்.

எம்மதத்திற்கும் சம்மதமான மாறாத சித்தாந்தங்கள் மூன்று:—(1) கடவுள் நம்பிக்கை. (2) ஜீவனின் அழியாத் தன்மை. (3) மனிதர்களில் தயை யாதி குணங்களின் மகத்வம்.

இதைப்போல் விக்ஞானங்களிலும் பொதுவான மாறாத கொள்கைகள் மூன்றுண்டு. (1) இயற்கையின் அழியாத்தன்மை. (2) ரசாயன தத்துவங்களின் நித்யத்வம். (3) சக்தியின் நித்யத்வம்.

இவ்வாறான தர்ம, விக்ஞான சித்தாந்தங்களில் ஒரு வித்தியாசமும் காணப்படவில்லை. ஆகையால் இவ்விரண்டின் சித்தாந்தங்களும் கூடியே மனித சமூகத்திற்கு நன்மையைச் செய்யமுடியும். ஆகையால் சத்தியமான மதம் ஒன்றிருந்தால் அதில் கீழ்வரும் சித்தாந்தங்கள் நடைமுறையிலிருக்கவேண்டும். (1) சமத்வம் (Equality) (2) உலக சகோதரத்வம் (Universal brother-hood (3) சர்வாங்க உன்னதிச்சாதனம் (Harmonious development) (4) விக்ஞான ஆதாரம் (Scientific basis) இந்நான்கு சித்தாந்தங்களையும் பூர்ணமாகக் கொண்டுள்ள மதம் எது என்பதை இப்போது ஆராய்வோம்.

## பைபிளும் உலகஉற்பத்தியும்.

பைபிளில் உலக உற்பத்தியை விக்ஞானத்திற்கு ஒவ்வாத முறையில் சொல்லியிருக்கிறது. பைபிளின் கொள்கைப்படி உலகம் தோன்றி 8 ஆயிர வருடங்கள் ஆயிற்று. ஆனால் தற்கால விக்ஞான ஆராய்ச்சிக்கு இக்கணிதம் முற்றும் விரோதமாயிருக்கிறது. "Science and Invention" எனும் அமெரிக்கப்பத்திரிகையில் பிப்ரவரிமாத வெளியீட்டில் ப்ரொபஸர் கீன் என்பார் "Age of Earth", "பூமியின் வயது" என்ற தலைப்பின் கீழ் "உலகம் தோன்றி 2 லட்ச வருடங்கள் ஆயிற்று என்று எழுதுகிறார். கடலில் சோடியம் இருப்பதைக்கண்டு பூகர்ப்பசாஸ்த்திரி ஜௌலீ என்பார் பூமியில் பிராணிகள் தோன்றி 10 கோடி வருடங்களாயிற்று என்று சொல்கிறார். பூமியின் வயதை ஆராய்ந்து கண்டுபிடிப்பதற்காக நியமிக்கப்பட்ட 'National Research Council" எனும் விக்ஞான சங்கம் பல வருடங்கள் ஆராய்ச்சிசெய்து உலகம் தோன்றி 1,85,20,00,000 வருடங்கள் ஆயிற்று என்ற முடிவையடைந்திருக்கிறது. இங்கலாந்தின் பிரசித்த விக்ஞானி ஜேம்ஸ் ஜீயன்ஸ் என்பார் தன் "Universe Around Us" எனும் புஸ்தகத்தில் உலகம் தோன்றி சற்றேறக் குறைய 200 கோடி வருடங்கள் ஆயிற்று என்கிறார்.



ஆஹா! தற்காலத்தில் பலகணக்கற்ற ஆராய்ச்சிகளின்பேரில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இக்கணிதத்தை, வைதிக தர்மத்தினர் கணக்கற்ற ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்துவிட்டார்களென்பதைக் குறித்து ஏன் நாம் பொறாமையடையலாகாது. வைதிக தர்மத்தின்படி உலகம் தோன்றி 1,97,29,49,035 வருடங்கள் என்றால் சற்றேறக்குறைய 200 கோடி வருடங்கள் ஆயிற்று. இவ்வளவு விக்ஞானிகளின் ஆராய்ச்சிகளையும் மீறி உலகம் தோன்றி 8 ஆயிர வருடங்களே ஆயிற்று என்று சொல்லும் பைபிளின் வார்த்தையை எவர்தான் ஒப்புக்கொள்ளமுடியும்? இன்னும் சிருஷ்டிக்கிரமம் பைபிளில் விக்ஞானத்திற்கு விரோதமான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. "கடவுளின் ஆத்துமா நீரின்மேல் சயனத்திருந்தது." ஆனால் நீர் எதன்மேல் சயனித்திருந்தது என்று பைபிள் சொல்லவில்லை. "முதல் நாள் பூமியை ஆக்கினார்; மற்றும் ஒவ்வொரு நாள் ஒவ்வொன்றை உண்டாக்கி நான்காம் நாள் சூரியனை உண்டாக்கினார்." இம் மகாபுத்திசாலியை நாம் "சூரியன் நான்காம் நாள்தான் உண்டானார். தினம் என்பது இரவு பகல் சேர்ந்தாகிறது. என்றால் சூரியன் இல்லாதபோது முன்மூன்று தினங்கள் எப்படி அறியப்பட்டது? என்று கேட்கவேண்டும். இவ்வாறான விவேக விருத்த வார்த்தைகளை எந்த அறிவாளி ஒப்புக்கொள்ள முடியும்?

## குரானும் விக்ஞான விருத்த கற்பனைகளும்.

குரானில் "ஆகு" என்றவுடன் உலகம் ஆய்விட்டது, பைபிளிலும் ஒரு பொருளும் இல்லாதபோதே கடவுள் மண்ணிலேயிருந்து ஆதாமின் சரீரத்தை உண்டாக்கினார். இவ்வாறு இவ்விரண்டு மதங்களும் "ஒன்றுமில்லாததிலிருந்து சிலது" (Something of nothing) சித்தாந்தத்தை நம்புகின்றன. ஆனால் இதை தற்கால விக்ஞானத்தின் ஆரம்பமாணாக்கன்கூட நம்பமாட்டான். இன்னும் சூரியன் முதலானவைகள் பூமிக்கு நான்கு பக்கங்களிலும் சுற்றுதல், ஏழாம் ஆகாயத்தில் கடவுள் அமர்ந்திருப்பது; கடவுள் ஒட்டகம் பெற்றிருத்தல்; சந்திரன் இருபிளவாகல் முதலான அநேக விக்ஞான விருத்த வார்த்தைகள் காணப்படுகின்றன. ஆகையால் இதையும் சர்வ மத சம்மதமானதென்று ஒப்புக்கொள்ளமுடியாது.

## வைதிக தர்மமும் விக்ஞான சம்மதமும்.

ப்ரான்ஸ்தேச வித்வான் ஜைகாலியட் என்பார் தன் "The Bible in India" என்னும் நூலில் எழுதுகிறார்:—"An astonishing fact! The

Hindu revelation the Veda is of all the revolations, the onely one whose ideas are in perfact harmony with modern science".

என்றால் உலகில் கடவுளின் ஞானம் என்று சொல்லப்படும் எல்லா நூல்களிலும் வேதமே (ஹிந்து வேதம்) தற்கால விக்ஞான ஆராய்ச்சிகளுக்கு ஒத்திருக்கிறது. இம்மாதிரியே Sir Arthur Carpenter என்பாரும் தன் 'Art of creation' என்ற நூலிலும் எழுதுகிறார்.

அன்பு மிக்க வாசகர்களே! இவ்வியாசத்தைப் படித்த நீங்கள் வைதிக தர்மமே விக்ஞானச் சம்மத தர்மம் என்பதை அறிய முடியும். மற்ற எம்மத சித்தாந்தங்களும் தற்கால ஆராய்ச்சியாளர்களின் மனதை திருப்திசெய்விக்காது. ஆகையால் இந்த தர்க்கசித்த, புத்திக்ராஹ்ய, விக்ஞானானுகூல வைதிக தர்மம் உலகெங்கும் பரவவேண்டுமென்று எங்கள் விருப்பம். இதனாலேயே எங்கள் ஆசாரியரின் உத்திரவும் :—

"வேதத்தைக் கற்றலும், கற்பித்தலும், கேட்டலும், கேட்பித்தலும் ஒவ்வொரு ஆரியருடைய பரம தர்மமாகும்".

எல்லா இந்துப் பெரியோர்களும் இந்நற்காரியத்தில் எங்களுக்குதவி புரிவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

வைதிக தர்மம் உலகெங்கும் ஓங்கி வளர்க.

ஜேய்! வைதிக தர்மகீ!!

---

**வேதமே மெய்யறிவிற்கெல்லாம் நூலாகும். வேதத்தைக் கற்றலும், கற்பித்தலும், பிறருக்கு சொல்லுதலும், ஒவ்வொரு ஆரியருடைய முக்கிய கடமை.**

# ஆர்ய சமாஜமும் டாக்டர் அம்பேத்காரும்.

சின்னாட்களுக்கு முன் ஹரிஜனத் தலைவராகிய டாக்டர் அம்பேத்கார் நாஸிக் யெனுமிடத்தில் தான் ஓர் ஹிந்துவாகப் பிறந்தது துர்ப்பாக்ய வசத்தாலென்றும், தான் சாகும்போது ஹிந்துவாக சாக விரும்பவில்லை என்றும் தெரிவித்ததாக பத்திரிகைகள் வாயிலாக நாம் அறிந்தோம். இன்னும் அவர் ஆரிய சமாஜத்தைக் குறித்துச் சில ஆக்ஷேபனைகளையும் செய்தாராம். அதன் பேரில் அக்டோபர் மாதம் 30ந் தேதியன்று பம்பாய் ஆரிய சமாஜத் தலைவர் பண்டிட். விஜயசங்கர் சர்மா; உபக்காரியதரிசி பா. வல்லபதாஸ்; உபதேசகர் பண்டிட். பரகூபாய்; ஆரிய சன்யாஸி ஸ்வாமி ஓங்கார சச்சிதானந்தஜீ முதலானோர் டாக்டர் அம்பேத்காரைக்கண்டு பேசச்சென்றனர். காலை 9-30 மணி முதல் 11-30 மணிவரை வாக்குவாதம் நடைபெற்றது. அதன் விவரத்தைக் கீழே சுருக்கமாக வரைவோம்—: !

கேள்வி :—(ஆரிய சமாஜத்தார்) :—"ஆரிய சமாஜம் ஜாதிக்கோட்பாட்டிலும், கலகங்களிலும் மூழ்கியிருக்கிறது. அது நம்மை உன்னதியாக்க முடியாது" என்று சொன்னதுண்டா?

டாக்டர் :—இல்லை. நான் அவ்வாறு யாரிடத்திலும் சொன்னது கிடையாது.

கேள்வி :—தாங்கள் "ஆரிய சமாஜம் கோட்பாடுகள் அற்ற சபை. ஆகையால் நான் அதில் சேரமுடியாது" என்று சொன்னதுண்டா?

டாக்டர் :—இல்லை. நான் அவ்வாறு சொன்னதில்லை.

கேள்வி :—தாங்கள் "ஐக்யமாகாணம்; பஞ்ஜாப் முதலிய இடங்களில் ஆரிய சமாஜம் தீவிர வேலைசெய்து வருகின்றது. ஆனாலும் அங்குள்ள தீண்டத்தகாதவர்களை ஆர்ய சமாஜம் தன்னுடன் சேர்த்துக்கொள்ளவில்லை" என்று சொன்னதுண்டா?

டாக்டர் :—ஆம் நான் அவ்வாறு சொன்னது நிச்சயம்தான்.

சமாஜத்தார் :—மேற்கண்ட விடங்களில் ஆரிய சமாஜம் கணக்கற்ற தீண்டத்தகாதவர்களை தனக்குள் சேர்த்துக்கொண்டு சமத்வம் அளித்திருக்கிறது. அநேக தீண்டத்தகாதார் சமாஜத்தில் சேர்ந்து மற்றவர்களைப் போலவே எல்லா விதங்களிலும் சமத்வமாக சாஸ்த்ர உபதேசம் செய்துவருகின்றனர். தீண்டத்தகாதவர்களுக்கு ஆரிய சமாஜம் யக்ஞோபவீதமளித்து தன் அங்கத்தினர்களாகச் செய்துகொள்கின்றது. அதன் பின் அவர்களை பூரணமாக சமத்வபாகம் செலுத்தி வருகிறது.

கேள்வி :—தாங்கள் ஆரிய சமாஜம் என்பது ஹிந்துக்களிலே ஓர் சம்ப்ரதாயம் யென்று நம்புகிறீர்களா ?

டாக்டர் :—ஆம். ஏனென்றால் ஆரிய சமாஜம் நான்கு வர்ணங்களை நம்புகிறது. நான்கு வருணங்களை நம்புதல் ஓர்வித அடையாளச் சீட்டுக்குச் சமமாகும். இன்றைய நாட்களில் எப்படி வர்ணபேதங்கள் இருந்துவருகிறது ! இதனால் நான்கு வர்ணங்களை நம்புதலே ஹிந்து சம்ப்ரதாயத்தின் அடையாளமாகும்.

சமாஜத்தார் :—ஆரிய சமாஜம் நான்கு வர்ணங்களை நம்புவது உண்மைதான். ஆனால் பிறப்பினால் அல்ல. குண கர்ம ஸ்வபாவங்களால் நம்புகிறது. இந்த ஆதாரத்தைக்கொண்டே தற்காலம் தீண்டத்தகாதவரும் வித்வானாகி புரோகிதம் செய்துகொண்டு வருகின்றார். ஆரிய சமாஜத்தில் சுத்தியாக்கிச் சேர்த்துக்கொள்ளப்பட்ட கணக்கற்ற மகம்மதியர்கள் தற்போது புரோகிதம் செய்துகொண்டு வருகின்றனர். (இவ்விடத்தில் டாக்டர் முன்பு ஆரிய சமாஜத்தார் 25-10-35 ந் தேதியின் “ வர்த்தமானம் ” பத்திரிகையின் பிரதியொன்றை வைத்தனர். அதில் ஆமதாபாத் ஆரிய சமாஜக் காரியதரிசி பண்டிட். ஸ்ருதபந்து சாஸ்த்ரியார் “ நான் பிறப்பில் பிராம்மணன். ஆனால் டாக்டர் அம்பேத்காருக்கு ஓர் புத்திரன் இருப்பாரானால் அவருக்கு என் புத்திரியை விவாகம் செய்தளிக்கச் சிறிதும் தயங்கேன் ” என்று வெளியிட்டிருக்கிறார்) பாருங்கள் ஆரிய சமாஜம் பிறப்பால் வர்ணத்தை நம்புவதாயின் இப்பேர்ப்பட்ட தீர்மானத்தை நீங்கள் காணமுடியாது. ஆரிய சமாஜம் வர்ணத்தை எப்படி நம்புகிறதென்று பாருங்கள் ! தாங்கள் இப்போது டாக்டர். ஏன் என்றால் நீங்கள் அதற்கு தகுதிப்பட்டம் பெற்றிருக்கிறீர்கள். தங்களுக்கு ஓர்



புத்திரன் இருக்கின்றான் என்று வைத்துக்கொள்வோம். அவர் தகுதிப்பட்டம் பெறாமலே கேவலம் டாக்டர் புத்திரன் என்ற முறையில் தன்னையும் ஓர் டாக்டர் என்று சொல்லிக்கொண்டால் அரசாங்கம் அதை யேற்றுக்கொள்ளாது. இதேபோல் ப்ராம்மணன் புத்திரனை பிராம்மணத் தன்மையை (வித்வத் தன்மையை) அடையாதவரை பிராம்மணனாக ஆரிய சமாஜம் ஏற்றுக்கொள்ளாது. கல்வி குண ஒழுக்க சம்பன்னனையே ஆரிய சமாஜம் பிராம்மணனென்று ஏற்றுக்கொள்ளும். பாருங்கள் ஆரிய சமாஜத்தின் கோட்பாடுகளை !

டாக்டர் :—நான் ஆரிய சமாஜ சித்தாந்தங்களைப் பார்க்கவில்லை. ஆகையால் நான் உங்களின் வார்த்தைகளை மறுக்கவில்லை.

கேள்வி :—நீங்கள் சத்தியார்த்தப் பிரகாசம் வாசித்திருக்கிறீர்களா ?

டாக்டர் :—இல்லை. நான் முழுதும் வாசித்ததில்லை. கொஞ்சம் படித்து விட்டுவிட்டதுண்டு.

சமாஜத்தார் :—நீங்கள் கட்டாயம் அதைப் படிக்கவேண்டும். அப்போதே நீங்கள் ஆரிய சமாஜத்தின் உயர்ந்த தத்துவங்களை அறிந்துகொள்ள முடியும்.

டாக்டர் :—நான் இனிமேல் கட்டாயம் படிக்கிறேன்.

டாக்டர் :—நான் அத்யாத்ம விஷயத்தைத் தேடிக்கொண்டிருக்கிறேன். அது எங்கே எனக்குக் கிடைக்குமோ அங்கேதான் செல்வேன்.

சமாஜத்தார் :—நீங்கள் தர்சனங்கள் ; உபநிஷத்துக்கள், வேதங்களைக் கற்கவேண்டும். அதில் உங்களுக்கு வேண்டுமளவு அத்யாத்ம விஷயம் கிடைக்கும்.

டாக்டர் :—நான் கட்டாயம் வாசிக்கிறேன்

கேள்வி :—நீங்கள் எந்த மதத்திற்காவது செல்வதற்கு முடிவு செய்திருக்கிறீர்களா ?

டாக்டர்:—எந்த முடிவையடையவும் எனக்கு இப்போது சகவாசம் கிடையாது. அன்றி நான் என் சமூகத்தாரின் சம்மதியின்றி ஒன்றிலும் பிரவேசிக்கப் போவதில்லை. ஏனென்றால் அவர்களைவிட்டு நான் பிரிந்து விட்டால் அவர்களின் தசை இன்னும் கேவலமாய் விடும். ஆகையால் நான் என் அபிப்பிராயத்தை என் சமூகத்தினர்களுக்குத் தெரிவிப்பேன். அவர்களின் சம்மதியின் பேரிலேயே நான் எதையும் முடிவு செய்வேன். அவர்கள் என்னைத் தொடர்ந்துவர சம்மதிக்கவில்லையென்றால் நான் அவர்களைத் தொடர்ந்தே செல்வேன். ஏனெனில் நான் அவர்களின் பிரிவை விரும்புகிறேனில்லை. இதுதான் என் முடிவு.

சமாஜத்தார்:—சில பஞ்சாப், ஐக்யமாகாண உர்து பத்திரிகைகளில் "டாக்டர் அம்பேத்கார் தன் சகாக்களுடன் இஸ்லாம் மதத்தைத் தழுவத் தீர்மானித்து விட்டார்" என்று காணப் படுகிறதே இது உண்மைதானா? நீங்கள் அவ்வாறான முடிவை யடைந்ததுண்டா?

டாக்டர்:—பொய். முற்றிலும் பொய். நான் இதுவரை மகம்மதிய மதத்தைக் குறித்து நினைத்ததும் கிடையாது. என் ஆராய்ச்சியில் இன்னும் அது என் கவனத்தில் செலுத்தப்படவில்லை என்றால் நான் எப்படி அவ்வாறு தீர்மானித்திருக்கமுடியும்? இது முற்றிலும் அசத்தியமென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்.

இதற்குப் பிறகு பரஸ்பரம் "நமஸ்தே" செய்துகொண்டபின், ஆரிய சமாஜத்தார் விடைபெற்றுக் கொண்டனர்.

---

**உலகத்திற்கு உபகாரம் செய்வதே இந்த ஸமாஜத்தின் முக்கிய கருத்து. அதாவது தேக சம்பந்தமாயும், ஆத்ம சம்பந்தமாயும், சமூகசம்பந்தமாயும் மேன்மையைச் செய்யவேண்டும்.**

# பண்டித ராமச்சந்திரரும் பசுபலியும்

திருவளர்ந்தோங்கியிருந்த பரத கண்டத்துள் கல்கத்தா என்னுமோர் நகரமுளது. ஆங்கே காளிதேவியின் சன்னதியொன்றிருக்கின்றது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான காளி பக்தர்கள் அங்கு செல்கின்றனர். ஆயிரக்கணக்கான ஆடுகள் அம்மனுக்காகவென்று ஆங்கு பலியிடப்படுகின்றன. புத்திரப்பேறு, செல்வப்பேறு, தொழிற்பேறு மற்றும் மனைவி, புருடர்ப்பேறுகளை விரும்பும் பக்தர்கள் அம்மனுக்கு ஆட்டுப்பலியால் களிப்பையுண்டாக்கி தங்களுக்கு வேண்டுவன பெற்றுக்கொள்கின்றனராம்.

"**अहिंसा परमो धर्मः**" என்னும் முதுமொழி தோன்றி, பழக்கத்திலும் உலவிவந்த இந்தியப் பெருமக்கள் இவ்வாறு தங்கள் மதத்தின், தர்மத்தின், நியாயத்தின் பெருமைக்கு இழிவைத் தேடும் முறையில் புரிந்துவந்த இத் தீக்கொலைத்தொழிலைக் கண்டு சகியாது பண்டித ராமச்சந்திரர் எனும் ஓர் உத்தமர் சென்ற சில நாட்களுக்குமுன்பாகஅதே காளிமாதேவியின் சன்னதிக்கெதிரே உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தனர். எதற்காக! தன் நாட்டு மக்களை கடவுள் பெயரால் செய்யப்பட்டுவரும் இக்கொலைத்தொழிலிலிருந்து விலக்கும் பொருட்டே! முப்பத்தியிரண்டு தினங்கள் இதற்காக முழுப் பட்டினியிருந்தும் அக்கொலைத்தொழில் நிற்கவில்லை. கருணையே உருவாகக் கொண்ட ராம, கிருஷ்ண, தர்மநந்தனாதி முதியோர்களின் வம்சத்திலே வந்த இக்கால துர்க்கா பூஜையாளர்களின் உள்ளங்கள் பட்டினியால் வாடிய அப்பெரியாரின் பால் கருணை காட்டாதொழிந்தன.

பண்டித மதன்மோஹன் மாளவியாஜீ பண்டித ராமச்சந்திரரை அணுகி "பக்தா! நீ இவ்வாறு இன்னும் பட்டினியை நீடித்தல் நல்லதல்ல. மக்கள் உள்ளம் இன்னும் உன் பால் கருணை காட்டும் பக்குவத்தைப் பெற்றில்து. ஆகையால் நீ இம்முறை உன் உபவாசவிரதத்தை முடித்துக்கொள். நாம் அடுத்த வருடம்வரை மக்களின் உள்ளங்களிலே சத்தியக் கருணைப் பிரகாசத்தைச் செலுத்த பன் முறையிலும் உபதேசம் புரியச்செய்து வருவோம், பிறகு அவசியமாயின் மறுபடி விரதத்தை ஆரம்பிப்போம்." என உபதேசித்தார்.

அவ்வினிய உபதேசத்தை உய்த்துணர்ந்த அர்ஜுனரும் தன் மனக்கலி தத்தை 32 தினங்களுக்குப் பிறகு முடித்துக்கொண்டார்.

இக்கொடும் கொலைத்தொழிலை கடவுளின் பெயரால் மனிதர்கள் ஏன் புரிந்து வருகின்றனர்? சுயநலத்தை நாடி கடவுளை திருப்திசெய்விப்பதெனும் மூட நம்பிக்கையால்தான். இம்மூடநம்பிக்கையை இவர்கள் எவ்வாறு கற்றுக் கொண்டனர் என்பதை இனி ஆராய்வோம்;—

மஹாபாரத யுத்தம் வரை உலகத்திற்கெல்லாம் சத்தியத்தைப்போதித்த குருவாயிருந்த பாரதநாட்டு மக்கள் அய்யுத்தத்தின் பிறகு பொய்ப்பிரசாரகர்களாக மாற ஆரம்பித்தனர். உண்மை—குணகர்மஸ்வபாவங்களால்—ப்ராம்மணர்கள் இல்லாதொழிந்தமையால் பொய்—பிறப்பினுல்—பிராம்மணர்கள் தோன்றலாயினர். சத்தியவேதக்கலையை கற்பிப்பாரில்லாதொழிந்தமையால் பொய்ப்புராணக்கற்பனையாளர்கள் தோன்றினர். சத்தியப் பிரசாரம் புரியும் தவஸ்விரேஷ்டர்கள் இல்லாதொழிந்தமையால் சுயநலத்தை நாடி கொடிய கொலைத்தொழிலைப் பிரசாரம் செய்யும் கொடியர்கள் தோன்றினர். பாரத கண்டமே அக்ஞான இருளில் முழுக ஆரம்பித்தது. சுமார் 1000 வருடங்களுக்குப் பிறகு வேதவிரோதமாகவே எல்லாக்காரியங்களையும் மக்கள் புரியலாயினர். அஹிம்சையைக்கைவிட்டு ஹிம்சையைக் கைக்கொண்டனர். பவித்ர ஆஹாரத்தை நீக்கி புலாலை அருந்தினர். ஒரு தெய்வம், ஒரு ஜாதியென்பதை மறந்து பல தெய்வங்கள், பல ஜாதிகளைகண்டனர். ஒற்றுமையை மறந்து தங்களுக்குள்ளேயே கலகம் புரிந்து கொண்டனர். கடவுளின் உண்மை வழிபாட்டை அறவே மறந்து விக்கிரகங்களை வணங்கத் துடங்கினர். நாளாவட்டத்திலே கடவுள் தங்களைப்போன்ற ஓர் மனிதர்தான், தாங்கள் விரும்புவதையெல்லாம் அவரும் விரும்புவார் என்று நினைத்து தாங்கள் செய்வதையெல்லாம் கடவுளுக்காகவென்றும் செய்வித்துவந்தனர். தாங்கள் புலால் அருந்துவதால் கடவுளுக்கும் அது தேவையாயிருக்குமென்று நினைத்து மிருகங்களைப் பலியிட ஆரம்பித்தனர். வேதங்களுக்குத் தங்கள் அநியாய, அதர்மங்களுக்குத்தக அர்த்தம் செய்து கொண்டனர். இக்காலத்தில்தான் வேதங்களில் காணப்படும் அஸ்வமேத, நரமேத, கோமேத யாகங்கள் பொருளில் மாறுபட்டு குதிரை, மனிதன், பசுக்களை பலியிடுதல் என்ற பொருள், நடைமுறையில் வரலாயிற்று. அஸ்வமேதம் என்றால் குதிரையை கடவுளுக்காக பலியிடுதல், கோமேதம்—பசுவை பலியிடுதல், நரமேதம்—மனிதனைப் பலியிடுதல் என்று நினைத்து கொலைத்தொழில்களைப் புரிந்துவந்தனர். அந்தோ பாரத நாடே! உன் பாக்கியத்தை என்னென்பது!!



மஹரிஷி ஸ்வாமி தயானந்த சரஸ்வதியார் தோன்றும் வரை பாரதகண்டம் அதே தீய மார்க்கத்தில் தான் சென்று நாசமாக்கிகொண்டே வந்தது. அதைத் தடுத்து ஞானதீபத்தை மறுபடியும் பாரதநாட்டுச் சிகரத்தில் வைத்து அவ்வொளியால் மக்களை உய்விப்பான்வேண்டி கடவுளால் அருளப்பெற்ற வரப்பிரசாதம்போல ஞான சூரியரான தயானந்தர் தோன்றினர். மூடப்பழக்க வழக்கங்களை அழித்து மறுபடி சத்யத்தை திறந்து மக்களுக்குக் காட்டினர். வேதங்களுக்கு சுயநலத்தியர்களால் கற்பிக்கப்பட்ட பொய்யுரைகள் இலக்கண, யுக்தி, பழக்கங்களுக்கு விரோதமானவைகள் என்பதை விளக்கி சத்திய உரையை—ரிஷிகள் ஆதியிலே கற்பித்த உரையை—உரைத்தருளினர். ரிஷிகளின் ஆதாரம் கொண்டு ஸ்வாமி தயானந்தர் அஸ்வமேத, கோமேத, நரமேதங்களுக்கு செய்யும் பொருள்களைக் கீழே வரைவோம்;—

## அஸ்வமேதம்

**राष्ट्रं वा अश्वमेधः।** ராஷ்ட்ரம் வா அஸ்வமேதஃ। (சதபதம்.)

**अग्निर्वा अश्वः। आज्यं मेधः॥** அக்னிர்வா அஸ்வஃ। ஆஜ்யம்மேதஃ॥ (சதபதம்.)

குடிகளின் நன்மையையே நாடும் கருத்தினனான அரசன் தன் நாட்டை தர்மத்திற்கனுசாரனையாகவும், நியாய விரோதமில்லாமலும் பரிபாலித்தல் அஸ்வமேதம்என்று சொல்லப்படும்.

நன்கு வேதக்கலைகளை கற்றுணர்ந்த பண்டிதன் தன் சீடர்களுக்கு ஒரு வித பிரதிபலனையும் நாடாமல் கல்விகற்பித்தல் அஸ்வமேதம்.

காற்றை சுத்திசெய்வதன் மூலமாய் மக்களுக்கு உதவிசெய்ய விரும்பி நெய் முதலான பல,சுகந்தப் பொருள்களை நெருப்பிலிட்டு வேள்விபுரிதல் அஸ்வமேதம்.

(குதிரையை வெட்டி கடவுளுக்கு திருப்திசெய்விப்பது சரியா இவ்வாறு செய்தல் சரியாயென்று அறிவாளிகள் ஆராய்வார்களாக).

## கோமேதம்

**गौः इति पृथिव्या नामधेयं।** கௌஃ இதி ப்ருதிவ்யா நாமதேயம்।

**अन्नं हि गौः।** அன்னம் ஹி கௌஃ (சதபதம்)

**गौः इति इन्द्रियम्।** கௌஃ இதி இந்த்ரியம்। (சதபதம்)

162215

பூமியில் அழுக்குகள் சேராவண்ணம் ஆரோக்யத்தை நாடி சுத்தம்செய்தலின் பெயர் கோமேதம்.

ஆகாரத்தால் ஓர்வித துன்பமும் சேராவண்ணம் சுத்தம் செய்தலின் பெயர் கோமேதம்.

புலன்களைத் தீயவழிச்செல்லவொட்டாமல் தடுத்து தன்வசம் செய்தலின் பெயர் கோமேதம்.

(பசுவைக்கொன்று கடவுளுக்கு திருப்தி செய்விப்பதென்பதற்கும் இப்பொருளுக்குமுள்ள சத்யாசத்யத்தை சத்தியத்தை விரும்புபவர்கள் ஆராய்ந்து விசாரித்துப் பார்ப்பார்களாக.)

## நரமேதம்

**नरः मनुष्यः ।** நர: மநுஷ்ய:

இறந்துவிட்ட மனித உடலை வேதவிதிப்படி கொளுத்துதலின் பெயர் நரமேதம்.

(மனிதனை — கடவுளுக்குப் பிள்ளையை — வெட்டி கடவுளுக்கு அளிப்பது என்பது சரியா? இப்பொருள் சரியா என்பதை பெரியோர்கள் அறியட்டும்.)

## சக்தி — துர்க்கா பூஜை

தற்காலத்தில் சக்தி — துர்க்கையென்ற பெயரால் கோர ரூபமான சில விக்கிரகங்களைச்செய்துவைத்து அதற்காக ஆடுமாடுகளை பலியிடுவதே அவைகளின் பூஜை யென்று மக்கள் நினைத்திருக்கின்றனர். அதனாலேயே இக்கொடும் கொலைத் தொழிலைப்புரிந்து வருகின்றனர். தயானந்தர் இவைகளுக்கு என்ன பொருள் சொல்கின்றார் என்பதை கவனிப்போம் :—

**शक्ल शक्तौ**—சக்லு சக்தௌ :—எனும் தாதுவிலிருந்துண்டானது சக்தி.

**गम—गमने — दुःप्रत्ययः ।** து: பிரத்யயம் சேர்ந்த கம்—கமனே தாதுவிலிருந்துண்டானது துர்க்கை.



**या सर्वं जगत् कर्तुं शक्नोति सा शक्तिः**

யா ஸர்வம் ஜகத் கர்தும் சக்நோதி ஸா ஶக்தி:

சகல உலகங்களையும் படைக்கும் சக்தி பொருந்திய கடவுளின் பெர்ய "சக்தி" எனப்படும்.

**दुःखेन गम्यते प्राप्यते इति दुर्गा**

துக்கேன கம்யதே ப்ராப்யதே இதி துர்க்கா

எல்லா துக்கங்களுக்கும் அடைக்கல ஸ்தானமாகிய கடவுளின் பெயர் துர்க்கா.

இப்பேர்ப்பட்ட உண்மைகள் மறைந்து தற்காலம் கல், மண், கட்டைகளுக்கே கடவுளின் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தோ! மக்கள் இனியேனும் உண்மையை உணர்வார்களாக.

கல்லுருவங்களைக் கடவுளாகக் கொண்டவர்கள் ஆடுமாடுகளை கடவுளுக்கென்று பலியிட எப்படி கற்றுக்கொண்டார்கள் என்பதைப்பார்ப்போம். கல்லைக் கடவுளாகக்கொண்ட சில நாட்களுக்குப்பின் அதற்கு ஆடையாபரணங்களை அணிவிக்கத் துடங்கினர். மற்றும் சில தினங்களுக்குப்பின் தங்களைப்போல் அவ்வுருவங்களுக்கும் விவாகம், சோபனம் முதலிய வைபவங்களைச் செய்தனர். இவ்வாறாக கடவுளை தங்களைப்போன்ற ஓர் மனிதன் என்ற நினைவு உண்டாக உண்டாக அக்கல்லுருவங்களுக்குச்செய்யும் உபசாரங்கள் அதிகமாகத் துடங்கின. ஒவ்வொருவரும் தாங்கள் உலகத்தில் எதையெதை விரும்புகிறார்களோ அவைகளை எல்லாம் அக்கல்லுருவக்கடவுளும் விரும்புவதாக நினைத்து தாங்கள் செய்துகொள்வதை யெல்லாம் அவைகளுக்கும் செய்வித்துவந்தனர். இதே நிலையில் மக்கள் பவித்திர ஆகாரத்தை மறந்து புலா லுண்ணத்துடங்கியாலே அக்கல்லுருவக்கடவுளுக்கும் புலாலை சமர்ப்பிக்கத்துடங்கினர். தங்கள் வயிற்றுக்காக ஆடுமாடுகளைக் கொல்வதைப்போலவே கல் தெய்வங்களின் பசிக்காகவும் கொல்ல ஆரம்பித்தனர். நாளாவட்டத்தில் கொலைத்தொழில் மிக அதிகமாகப் பரவியது.

கடவுளுக்கு முன்னிலையில் ஆடுமாடுகளைப் பலியிடக்கூடாதென விரும்பும் பெரியோர்கள் மாமிச உணவின் கெடுதல்களையும் கூடவே உணர்த்திவந்தால் நலமாயிருக்கும். மனிதர்கள் தங்களுக்குகந்தவைகளை கடவுளுக்காக வென்

றும் சமர்ப்பிக்கும் பழக்கமுடையவர்களாயிருப்பதால் அவர்களுக்குப் புலால் உணவின் கொடுமைகளை விளக்கிக்காட்டுவோமானால் நாளாவட்டத்தில் பலிகளையும் அவர்களே நிறுத்திவிடுவார்களென்று நம்புகிறோம். ஆரிய சமாஜ ஸ்தாபகரான மஹரிஷி ஸ்வாமி தயானந்த சரஸ்வதியார் உலக மக்கள் எல்லோருமே மாமிச உணவை விட்டுவிட வேண்டுமென்று விரும்புகிறார். அவர் தன் சத்தியார்த்தப் பிரகாசத்தில் பின்வருமாறு எழுதுகிறார்:—

ஓர் பசு தன் வாழ்நாளில் 4,75,600 பேர்களுக்கு 1 வேளை ஆகாரமளிக்கிறது. ஆகையால் ஓர் பசுவைக்கொல்பவன் இவ்வளவு பேர்களின் ஆகாரத்தை நாசமாக்குபவனாகின்றான். இவ்வாறேதான் மற்ற ஆடு முதலாகிய மிருகங்களைக் கொல்வதும் பாபம். கொலையின்றி மாமிசம் கிடைக்காது ஆகையால் அஹிம்சையாளர்கள் மாமிசத்தையருந்தலாகாது. மாமிசம் மனிதர் குணங்களை தீயதாக்குகிறது. பல வியாதிகளை உண்டாக்குகிறது. ஆரோக்ய, வீர்ய, பலத்தை நாசம் செய்கிறது. காரணம் மாமிசத்தில் மிருகத் தன்மையை உண்டாக்கும் சில விஷப்பொருள்கள் கலந்திருக்கின்றன."

மாமிச, தாவர உணவுகளின் நன்மை தீமைகளை அடுத்த மலரில் வெளியிடுவோம். இதில் அவைகளை வெளியிட இடமின்மையால் இத்துடன் இதை முடித்துக்கொள்வோம்.

---

# பால்ய மணத்தின் தீங்குகள்.

ஊன ஷோடஶவர்ஷாயா மப்ராப்தஃ பஞ்ச விம்சதிம் ।
யத்யாதத்தே புமான் கர்ப்பம் குக்ஷிஸ்த: ஸ விபத்யதே ॥
ஜாதோவா ந சிரஞ்ஜீவேத் ஜீவேத்வா துர்ப்பலேந்த்ரிய: ।
தஸ்மாதத்யந்த பாலாயாம் கர்ப்பாதானம் நகாரயேத் ॥

—சுஸ்ருதர்.

பொருள் :—குறைந்தது பெண்ணுக்கு 16 வயதும்; புருடனுக்கு 25 வயதும் ஆவதன்முன் கர்ப்பாதானம் செய்துகொள்பவர்களின் கர்ப்பம் கர்ப்பப்பையிலேயே அழிந்துவிடும் (1) தவரி பிறந்தாலும் நீண்ட நாள் உயிர் வாழ்ந்திருக்காது; வாழ்ந்திருந்தாலும் இஞ்சிற்றும் பலமற்றதாக பூமிக்குப் பாரமாகத்தானிருக்கும். ஆகையால் யுக்தவயதிற்குமுன் கர்ப்பாதானம் புரியலாகாது.



16 வயதிற்குமேல் 24 வயதிற்குள்தான் பெண்களின் வீர்யம் பக்குவமடைகின்றது. கர்ப்பாசயம் பிண்டத்தைத் தாங்கி வளர்க்கும் திறமையைப் பெறுகிறது. 8 வயதுப்பெண் குழந்தை பெறுவது முடியாத காரியம் (சத்தியார்த்தப் பிரகாசம் 4வது அத்யாயம்.)

யுக்தவயது வந்த தம்பதிகளுக்கே விவாகம் செய்துவரும் நாடு சதா சந்தோஷமாகவும், சுகமாகவும் இருக்கும் (சத்-பிர-4 அத்.)

சில காலத்திற்குமுன் பால்ய விவாகங்களையும், அவைகளால் ஏற்பட்ட நன்மை தீமைகளையும் அறியும்பொருட்டு "பால்யமணத் தடைச்சங்கம்" ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன் ஆராய்ச்சியின் பயனாக நாம் கீழ்வரும் விஷயத்தை அறிகிறோம்:—

பால்ய மணங்களின் எண்ணிக்கை :—

| வயதிலிருந்து | வயதுவரை | நூற்றுக்கு மணங்கள் |
|---|---|---|
| 0 | 1 | ·8 |
| 1 | 2 | 1·2 |
| 2 | 3 | 2·0 |
| 3 | 4 | 4·2 |
| 4 | 5 | 6·6 |
| 5 | 10 | 19·3 |
| 10 | 15 | 38·1 |

என்றால் 1 வயதுக்குக் குறைந்த குழந்தைகளுள் சராசரி 100க்கு 1 வீதம் மணம் செய்யப்பட்டிருக்கிறது.

இதன் பலனாக ஏற்பட்ட பால்ய விதவைகளின் எண்ணிக்கை கீழ் வருமாறு :—

| வயதிலிருந்து | வயதுவரை | மொத்தம் விதவைகள் |
|---|---|---|
| 0 | 1 | 1,515 |
| 1 | 2 | 1,785 |
| 2 | 3 | 3,485 |
| 3 | 4 | 9,076 |
| 4 | 5 | 15,019 |
| 5 | 10 | 1,05,482 |
| 10 | 15 | 1,85,339 |

இவ்வாறான பால்ய கர்ப்பத்தால் பிரசவகாலத்தில் இறந்துவிட்ட தாய்மார்களின் தொகை வருடத்தில் 200,000. என்றால் 1 மணி நேரத்திற்கு 20 மரணங்கள்.

தாய்மார்களின் தொகை இவ்வாறாக பிறக்கும் குழந்தைகளில் 1000த்தில் 181 குழந்தைகள் மரிக்கின்றன. சில விடங்களில் 1000த்தில் 400 குழந்தைகள் வரை சாகின்றன. இவையெல்லாமும் இந்தியாவில்தான்.

பெரியோர்களே! இக்கணக்கிலிருந்து நீங்கள் என்ன அறிகிறீர்கள் இவ்வாறு இளம் பெண்கள், குழந்தைகள் அதிகமாக இறக்கும் சமூகம்-மதம்-நல்லதென்று யாராவது சொல்வார்களா? இவ்வளவு மரணங்களுக்கும் காரணம் சாஸ்த்ர, வைத்ய விரோதமான பால்ய மணத்தால் அல்லவா? பால்ய வயதில் தங்களின் ஜீ... ரத்தினமான விந்தை விளக்குபவர்கள் இறந்தொழியாமல் என்னுவார்கள்? இவ்வாறான பால்ய விதவைகளின் இரத்தக் கண்ணீரால் சாபமடைந்து க்ஷீணமாகிக் கொண்டிருக்கும் இந்து மதத்தை அச்சாபத்திலிருந்தும் விலக்கி ஓங்கிவளரச்செய்ய உங்களுக்குச் சம்மதமில்லையா? சம்மதமாயின் உடனே இந்து சமூகத்திலிருந்து இப்பால்ய மணமாம் கொடிய ராக்ஷதனை சமூகத்துடன் நிர்மூலமாக்குங்கள். 16 வயதிற்குக் குறைந்த பெண்ணுக்கும், 25 வயதிற்குக் குறைந்த புருடனுக்கும் மணம் நடவாதபடி தடை செய்யுங்கள். இது உங்களின் கடமை. அப்போதே இந்து சமூகம் உயிர் பெற்றெழும். பால்யப் பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஒரு காரியத்தையும் சாதிக்காது, அதற்கு ஒரு பலமும் இருக்காது. உங்கள் சமூகம்-நாடு-உன்னதியாக வேண்டுமென்றால் நல்ல வீரமக்களைப் பெறக்கூடிய விதமாக தம்பதிகளைச் சேர்த்து மணம் புரியுங்கள்.

பால்யமணம் ஒழிக! யௌவனமணம் வளர்க!

வீரர்கள் பாரதத்தில் தோன்றுக.

ஜேய்! வைதிக் தர்மகி!!

# ஆரிய சமாஜம் என்பது என்ன?

**(லாலா லல்லாராம் அவர்கள் புத்தகத்தின் மொழிபெயர்ப்பு)**

(118-ம் பக்கத் தொடர்ச்சி)

தவிரவும், படித்த வகுப்பினிருக்கு மொத்தத்தில் தம்முடைய சீர்திருத்தக் கொள்கைகளிலுள்ள நம்பிக்கையை நிலைநாட்டி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர தைரியமில்லை, ஆகவே, சமூக சீர்திருத்தத்திற்கு முற்போக்காயிருப்பது, பொதுமக்களின் ஆத்மார்த்த விலாசமும், நடைமுறை முன்னேற்றமுமே, இவற்றை ஆரிய சமாஜம் வட இந்தியாவில் சாதித்திருக்கிறது. ஆதலால், ஆரிய சமாஜத்தின் சேவை பரவப்பரவ, சமூக சீர்திருத்தமும் பரவி வருகிறது. சிலர் குறிப்பிட்டபடி ஆரிய சமாஜத்தின் பிரசங்கம் அதன் அநுஷ்டானத்தைவிட அதிகமாக யிருப்பது வாஸ்தவமே, ஆனால் அது குற்றமாகாது. நம்முடைய கொள்கைகள் செய்கைகளைவிட மிகையாகவே யிருக்க வேண்டும். இல்லாவிடில் முன்னேற்றமிருக்காது, போகப்போக நமக்கு மேலான கொள்கைகள் தோன்ற அவற்றை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயல்கிறோம். முன்னேற்றம் என்பதைப் பரிபூர்ணமாகப் பெற்றுவிட்டால் அதோடு நம்முடைய நன் முயற்சிகள் நின்றுவிடும். சமூக சீர்திருத்தத்தைப் போன்ற உலக விவகாரங்கள் சதா அபிவிருத்தியடைய சாதனங்களிருக்கின்றன. தர்மமீ மாத்திரம் சாஸ்வதமானதும் மாற்றமுடியாததாகவுமிருக்கிறது. ஆகவே ஆரிய சமாஜத்தின் மூன்றாம் சேவை, பலனுள்ள சமூக சீர்திருத்தம்.

கல்வியே ஆரிய சமாஜத்தின் நான்காம் பெரு முயற்சி. எவ்விடஞ் சென்றாலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் ஸ்தாபித்திருக்கிறது. நம் பண்டை நாட்டு முறைப்படி பிரம்மச்சரியத்தை ஸ்தாபிக்கவும், மதபோதனையும் ஆங்கிலப் பயிற்சியும் கொடுக்க ஆரிய சமாஜம் நாடெங்கும் குருகுலங்களை நாட்ட எண்ணங்கொண்டிருக்கிறது. இம்மாதிரியான முக்கிய ஸ்தாபனமொன்று ஹரித்துவாரத்திற்குச் சமீபத்திலுள்ள காங்கிரி யென்னும் கங்காதீரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த ஸ்தாபனம் பஞ்சாபிலுள்ள ஆரிய பிரதிநிதி சபையின் ஆதரவில் ஏற்படுத்தியிருந்தபோதிலும், இந்தியாவிலுள்ள எல்லா ஆரிய சமாஜங்களின்

உதவியாலும் நடந்துவருகிறது. ஆரிய சமாஜத்தின் அரும்பெரும் நோக்கங்கள் இந்த தற்போது சிறிய ஸ்தாபனத்தில் பொருந்தியிருக்கின்றன. "பஞ்சாப் ஆரிய பிரதிநிதி சபை,"—பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், வடமேற்கு எல்லை மாகாணங்கள் இவற்றிலுள்ள ஆரிய சமாஜத்தின் பிரதிநிதிகளின் ஆலோசனை சபையார். 12-10-1902ல் நடந்த கூட்டத்தில், இவ்வரிய கல்லூரியின் நிமித்தம் ரூ. 50,00,000 கொண்ட நிதியைச்சேர்க்க தீர்மானித்துள்ளார்கள். இந்த ஸ்தாபனம், கடவுளின் கருணையால் பெரிய மனிதர்களைத் தயாரிக்குமென்பதில் ஐயமில்லை—ரிஷிகள், சாதுக்கள், மகான்கள், வேதங்களிலுள்ள உண்மைகளை யெடுத்துக்கூறி, உலகத்தாருக்குப் போதிக்க சக்தி வாய்ந்தவர்கள் வருவார்கள். தேக சக்தியும் உண்மை மதிப்பும் வாய்ந்த மனிதர்கள் தயார் ஆவது திண்ணம். போதுமென்ற சிந்தனையோடும் சிறந்த எண்ணங்களோடும் இருப்பவர்கள், தங்கள் பெற்றோரைப் போற்றுபவர்களும், மனைவிகளை ஆதரிப்பவர்களும், சிநேகிதர்களை மதித்து விரோதிகளிடமும் நியாய முறையில் நடப்பவர்களுமான தேசாபிமானிகளும் வீரர்களும் உண்டாவார்கள். ஆரிய சமாஜத்தின் சத்தியத்திற்காக உயிரையும் தியாகஞ்செய்யவும், ஆரியாவர்த்தத்தின் புனருத்தாரணத்திற்கும், வேதங்களின் நிலை நாட்டலுக்கும், சத்தியமும் நன்னடத்தையும் சிறந்துமிக்கோங்கவும் தமது முழு மனதுடன் உழைக்கும் வீரர்கள் ஜனிப்பார்கள். பயமற்ற பிரம்மச்சாரிகளே—ருத்திரர்களும் ஆதித்தியர்களும்—ஆரியாவர்த்தத்தில் மிக மிக முக்கிய தேவை. ஆகவே, இத்தியாதி காரணங்களுக்காக பஞ்சாப் ஆரிய பிரதிநிதி சபை இந்தியாவின் எல்லா அபிமானிகளும் வேதத்தில் பற்றுள்ளவர்களும் குருகுலத்திற்குத்தமது கடமையை நிறைவேற்றுவார்களென எதிர் பார்க்கிறது.

இந்த கல்லூரியின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

## 2. கல்வி அட்டவணையின் முக்கிய அமைப்புகள்.

கல்லூரியின் வித்தியார்த்திகள் 25 வயது வரையிலாவது பிரம்மச்சாரிகளாக விருந்து பின்வரும் பாடங்களைப் படிக்கவேண்டும்.

ஏ. 1. வேதங்கள், அங்கங்கள் உபாங்கங்கள் சஹிதம், (1) வேதம் மற்றுமுள்ள சத்திய சாஸ்திரங்கள்.

(2) ஆங்கிலம் 2. எம்.ஏ. வகுப்பு திட்டப்படி ஆங்கில பாஷையும் இலக்கியமும்.



(3) ரஸாயனம். 3. தற்கால ரஸாயன சாஸ்திரமும் தத்துவமும் ஆங்கிலத்திலும் ஆரிய பாஷையிலும் போதிப்பது.

நிபந்தனை 1. "2, 3 பிரிவுகளிலுள்ள படிப்பு முதல் பிரிவின் போதனைக்கு முரணாகவிருக்கப்படாது."

நிபந்தனை 2. தங்கள் பாதுகாப்பாளிகள் இஷ்டப்படாமலிருந்தால் பிரிவுகள் 2, 3 லுள்ள பாடங்களை அத்தகைய வித்தியார்த்திகள் படிக்க வேண்டியதில்லை.

பி. தேகாப்பியாசம், பிராணாயாமம், சந்தியோபாசனை, அக்னிஹோத்திரம் மற்றும் பிரம்மசாரி செய்யவேண்டிய விதிகளைச் செய்தல் இவை யெல்லாம் இக்கல்வியிற் சேர்ந்திருக்கவேண்டும். ஆரிய சமாஜத்தின் ஐந்தாவதும் மிகச் சிறந்ததென்று சொல்லக்கூடிய சேவை பிரசாரக் கூட்டங்களை நியமித்ததும் இந்தியா முழுவதும் யாத்ரீகராகச் செல்லும் பிரசார கர்த்தர்களை ஏற்படுத்தி அவர்கள் மூலம் பொது ஜனங்களுக்கு மாசற்ற மத விஷயங்களை போதித்தது மாகும். இந்த பிரசாரத்தால் மக்கள் சிறந்த புத்தியோடும் பரிவுடனும் தர்ம கைங்கரியங்களைச் செய்யத் தூண்டப்பட்டு வருகின்றனர். இந்த மதப்பிரசாரத்தினால் பிற மதங்களிலிருந்து திரும்பும் ஹிந்துக்களைச் சுத்தி செய்வதும் தாழ்த்தப்பட்டோருக்கு ஓர் அந்தஸ்து உண்டாக்குவதும் சாத்தியமாயிருக்கிறது. இம்முறையில் கடைசியாக நிகழ்ந்த சம்பவம் பஞ்சாப்பில் ராட்டியர்களின் முன்னேற்ற மெனலாம். மதப்பிரசாரத்தில் ஆரிய சமாஜம் குறுகிய நோக்கமுடையதல்ல. எங்கெங்கு சிறந்ததும் உயர்வானதும் உளதோ அவற்றை யெல்லாம் கிரஹித்துக்கொள்ளுகிறது. உலகத்திலுள்ளோர் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயங்களையே வற்புறுத்துகின்றது. இயேசு கிறிஸ்துவின் போதனையிலிருந்து உண்டான கிறிஸ்தவமதம்—கிறிஸ்தவ மடாதிபதிகளின் தத்துவங்களல்ல—தன்னுடையதாகக் கருதுகிறது. இஸ்லாம்—நெருப்பு கத்தியுட்பட்டதல்ல—சாந்தம் பிறரிடம் அன்பும் கடவுளின் கருத்துக்கிணங்கி நடப்பதும் தன் மதமாகவே கருதுகின்றது—பாஷை மாத்திரம் வேறு. தூய்மை, கவலை யொழிதல், முதலிய அரிய தத்துவங்களைக் கொண்ட புத்தமதமும் தன்னுடைய பாக்கியமாகக் கருதுகின்றது. ஆகவே, ஆரிய சமாஜத்தின் முக்கிய தர்மம் கடவுளே மனிதனுக்குப் பிதாவென்பதும் மனிதர் ஒருவருக்கொருவர் சகோதரர்களென்பது மாகும். ஆதலால் அதை எல்லோரும், ஏழைகளாயினும் செல்வவந்தராயினும், இத்தேசத்தவராயினும் பிற தேசத்தவராயினும், ஆதரித்து அதற்குத் தேவையான உதவி செய்யவேண்டும்.

மனிதரின் கஷ்டங்களைக் குறைக்க, அது அனாதை விடுதிகள், ஆஸ்பத்திரிகள், சாலையங்கள் முதலிய பொதுஜன சேவைக்கு வேண்டிய ஸ்தாபனங்களைத் தன் சக்திக்குத் தக்கவாறு ஏற்படுத்தியிருக்கிறது. வியாபாரத்தில் நேர் முறையில் ஈடுபடாவிட்டாலும் சுதேசி வஸ்துக்களை உபயோகிக்கும்படி தூண்டுவதோடு அதன் அங்கத்தினர்கள் வியாபாரத் துறைகளில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். ஆரிய சமாஜம் ஒழுங்குபட்ட முறையில் தன் சேவையை நடத்துவதால் மற்ற ஜனங்களுக்கு ஒரு வழிகாட்டியாயிருப்பதோடு மற்ற சங்கங்களும் சமாஜங்களும் ஆரிய சமாஜத்தின் முறைகளை யனுசரித்து கொண்டு ஆற்றி வருகின்றன. இப்படி ஆரிய சமாஜம் நேர் முறையில் பொதுஜன சேவையில் ஊக்கமுண்டாக்கிவருகின்றது. வட இந்தியாவில் ஒற்றுமையும் ஸாதுநலத்தின் பொருட்டு சொந்த சௌகரியங்களைக் குறைத்துக்கொள்ளும் புத்தியையும் உண்டாக்கியிருக்கின்றது. சென்ற முப்பது வருடங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்திற்கெல்லாம் தானே காரணமென்று பெருமை பாராட்டிக்கொள்ளாவிட்டாலும், வடஇந்தியாவில் ஆரியசமாஜம் பொதுஜன நன்மைக்கு மனம், மொழி, மெய் முதலிய எல்லா துறைகளிலும் பாடுபட்ட முக்கிய சங்கமென்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## 2. ராஜீய விஷயங்களைப் பற்றி ஆரியசமாஜத்தின் கருத்தென்ன ?

வெளிப்படையான முகாந்தரங்களுக்காக அது ராஜீய விஷயங்களில் தலையிடுவதில்லை ; தனக்கும் அவற்றிற்கும் யாதொரு சம்பந்தமில்லையென்று வற்புறுத்துகிறது. தற்போதைய அரசாங்கத்திற்குக் கீழ்படிந்தே நடக்கிறது. ராஜாங்கத்தின் சட்டத்திற்கு அடங்கி, அமைதியை ஊக்குவிப்பதே அதன் கருத்து. ஆனால் முகஸ்துதிக்காகப் பணிவதென்பது அதனிடம் கிடையாது. சட்ட விரோதமாய் நடக்காமலும் ஆனால் நியாயப்படி தனக்குள்ளதை விட்டுக் கொடுக்காமலிருப்பதே அதன் கொள்கை. அமைதிக்காகப் பிரசாரஞ்செய்யும் போது தன் கொள்கைகளைப் பயமின்றி வெளியிடவும் தன் சேவையை நிர்ப்பந்தமின்றி செய்யவும் பொதுஜனங்களாவது சர்க்காராவது தடைசெய்யாமலிருக்கவேண்டுமென்பதே அதன் கோரிக்கை. ஸ்வாமி தயானந்தர் உயிருடனிருக்கும்போதே தன்னுடைய சிஷ்யர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று போதித்தார். அவர் தேசத்தில் எண்ணிலா உபந்நியாசங்களை செய்திருக்கிறார். இவற்றிற்குப் பலவிதமான ஜனங்களும், பலகொள்கையினரும், வந்திருக்கிறார்கள். ஆனால் எந்த சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தின்



காவது, தேச அமைதிக்காவது, பிறருடைய கொள்கைகளுக்காவது விரோதமான வார்த்தை எதுவும் உச்சரித்ததாகச் சொல்லமுடியாது. ஆரியசமாஜம் தன்னுடைய ஸ்தாபகரின் இந்த கொள்கையை மதித்துவருவதோடு அவர் எப்படி நடந்து கொண்டாரோ அதேபோல் தன் அங்கத்தினர் நடக்கவேண்டுமென்று திட்டஞ்செய்கிறது.

ஸ்வாமிஜீ ' கர்மா ' வென்னும் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தார். கடவுளின் நியாயமான பரிபாலனத்தின் கீழ் ஒவ்வொருவனுக்கும் அவனவனுடைய செய்கைகளுக்குத் தக்க பலன் கிடைக்காமலிருக்காது. ஆகவே நாம் முதலில் ஒரு வஸ்துவைப்பெற அருகரான பின்பே அதைக் கேட்க வேண்டும். சுயராஜ்யமென்பது சிற்சில முக்கிய அம்சங்களில் பக்குவமான ஸ்திதியையடைந்தபின்பே பெறக்கூடும். இவையன்னியில் சுயராஜ்யம் கிடையாது. நாம் நம்முடைய மனம், பாவனை, நடத்தை முதலியவற்றை சீர்திருத்திக்கொண்டு மேலான நிலைமையை அடையவேண்டும். அப்போது கடவுள் பிரதிபலனாக நம்மை சிறந்த திறத்தாராகச் செய்வார்.

இவ்வாறு ஆரியசமாஜத்தின் முக்கிய அம்சங்களைக் குறித்து சுருக்கமாகக் கூறியபின், ரிஷிகளின் தேசமாகிய இந்தியாவின் மக்களில் புத்தியிற் சிறந்தவருக்கு ஒருவேண்டுகோள் செய்துகொண்டு இதை முடித்துவிடுகிறேன்.

ஆரியசமாஜத்தின் முக்கிய நோக்கம் உலகத்தின்—முக்கியமாக இந்தியாவின்—இகபரசுகங்களை விருத்திசெய்வதே. ஆகவே சிறந்த நோக்கமுடைய ஆண்களும் பெண்களும் ஆரிய சமாஜத்திற்குத் தம்மாலியன்ற முறைகளில் உதவிசெய்யவேண்டும். ராஜபுத்திரர்களும், செல்வவந்தர்களும், ஜமீன்தார்களும், பிரபுக்களும் பணஉதவி செய்யலாம். வித்வான்களும் தம்முடைய வித்வத்தைக்கொண்டு அதற்குத்தொண்டு செய்யலாம். ஆரியசமாஜத்தின் கருத்து சத்தியத்தை நிலைநாட்டுவதுதான், மதத்தைத் துல்லியமாக்குவதுதான் ; மனத்துய்மைதான், தேகப்பிரயாசைமுறையில் பலத்தையுண்டுபண்ணுவதுதான். மொத்தத்தில் ஆரியசமாஜத்தின் நோக்கம், பொதுவில் உலகத்தையும் குறிப்பாக இந்தியாவையும் மேன்மையடையச்செய்வதுதான். ஆரிய சமாஜத்தின் ஸ்தாபகர் தயானந்தரின் அழியாத ஆன்மாவும், அதனுடையமற்ற தலைவர்களும், அதன் தொண்டர்களும்—ஒருங்கே—இந்தப் புண்ணிய பூமி அதன் பூர்விக மஹத்தான நிலைமையைப் பெறவும், இங்கே மறுபடியும் செழிப்பு, சாந்தம், சந்தோஷம் ஓங்கி நிற்க உதவி செய்யும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். ஆரியசமாஜம் வெற்றியடைந்தால் தேசாபி

மாணிகளின் எண்ணங்கள் பூர்த்திபெறும். தர்மனிஷ்டையுள்ளவர்களின் கருத்து நிறைவேறும். சத்தியம் ஜயமடையும். நியாயம் தலை நிமிர்ந்து நிற்கும். ஜனங்கள் தம்முடைய வேலைகளை தர்மத்தின் சார்பாகச் செய்வார்கள். பிரபஞ்சத்தின் ஜகாதிபதி தொழப்படுவார். ஆகவே எல்லோரும் ஆரியசமாஜத்திற்கு உதவி செய்யுங்கள். ஆரியசமாஜத்திற்குத் தாங்கள் செய்யும் சிறந்த உதவிக்குப் பிரதி பலனாக இகத்தில் சகல சந்தோஷங்களும் பரத்தில் மோக்ஷப் பிராப்தியும் அடைவீர்களாக!

---

# மதங்களின் தலைமை ஊற்று

[இப்புத்தகம் கங்கா பிரசாத் எம். ஏ. அவர்களால் இயற்றப்பட்ட The Fountain Head of relegion எனும் ஆங்கில நூலின் மொழி பெயர்ப்பாகும். உலகத்தின் எண்ணற்ற பாஷைகளில் இது மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. சுமார் 6 மாதங்களுக்கு முன் இதை பண்டித கண்ணையா அவர்கள் தமிழில் மொழி பெயர்த்தார். இதுவரை இதை "தமிழ் நாடு" பத்திரிகை ஆசிரியர் தன் வாரப்பதிப்பில் வெளியிடுவதாகச் சொல்லி வைத்திருந்தார். ஆனாலும் இது வரை பல காரணங்களை முன்னிட்டு இது வெளியிடப்படவில்லை. தற்சமயம் நாமே ஓர் பத்திரிகை ஆரம்பித்திருப்பதால் அதை இதில் வெளியிடுகிறோம். "ஹிந்து தர்ம" வாசகர்கள் இதை முடிவு வரை வாசித்து ஹிந்து—வைதீக—தர்மத்தின் பெருமையையும், பழமையையும் அறிந்து இன்புற்று, தங்கள் மதத்தின் பால் பெருமை கொண்டொளிர்வார்களாக.

கே. ஞானி.]

## முகவுரை.

### மதத்தின் பிறப்பிடம் கடவுள்

மதத்தின் பிறப்பிடம் எது? எந்த மதத்தின் பிறப்பிடம்? எல்லாமதங்களுக்கும் ஆதாரமாயிருந்த ஓர் பொதுமதத்தின் பிறப்பிடம். இதற்கு இரண்டு விடைகள் உண்டு. (1) கடவுளே மதத்தின் பிறப்பிடம், (2) மனிதனே மதத்தின் பிறப்பிடம். பழைய சரித்திரங்களை நோக்குங்கால் மனிதன் தான் மதத்தின் பிறப்பிடமாயிருந்தான் என்பதற்கு ஓர் ஆதாரமும் கிடைக்கவில்லை. ஆனால் கடவுள்தான் மதத்தின் பிறப்பிடம் என்பதே பல ஆராய்ச்சிகளின் முடிவாகும். ஆகையால் கடவுளே மதத்தின் பிறப்பிடமாகும்.



இத்தீர்மானத்தை நிரூபிக்க நாம் எல்லாமதங்களின் துவக்கத்தையும் ஆராயவேண்டும். அவ்வாறு பார்க்கும்போது தற்போதுள்ள எல்லாமதங்களும் அவைகளுக்கு முன்னிருந்த ஓர் மதத்திலிருந்தே தோன்றினவென்று தெரிகிறது. அப்படியானால் முதலில் தோன்றிய மதம் கடவுளால்தான் அருளப்பட்டிருக்கவேண்டும். அப்படிக் கடவுளால் அருளப்பட்ட மதம்தான் வேதமதம். ஏனெனில் எல்லா மதங்களின் உயர்கருத்துக்களெல்லாம் அதிலே காணப்படுகின்றன.

"கடவுளே எல்லா மெய்யறிவிற்கும் மூலகாரணர்" என்பதை எந்த ஆஸ்திகரும் மறுக்கமாட்டார். மேற்சொன்ன வாக்கியத்தைக் குறிக்கும்போது "தத்துவ சாஸ்திரத்தின் தகப்பன்" என வழங்கும் டேஸ்கார்டேஸ் (Descartes) என்பாரின் வாக்கியத்தை நாம் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. அவர்—"நான் ஆழ்ந்து சிந்திக்கச் சிந்திக்க இம்முடிவு என் மனதால்தான் தீர்மானிக்கப்பட்டதென்று நான் நினைக்கக்கூடவில்லை. கடவுள் முடிவில்லாதவர், என் மனம் முடிவுடையது. கடவுள் கலப்பற்றவன், நான் கலப்புற்றவன். ஆகையால் இம்முடிவைப்பெற்றவன் நானாக இருக்கமுடியாது. ஆனால் இம், முடிபு என்மனதில் கடவுளாலேயே முத்திரிக்கப்பட்டதாயிருக்கவேண்டும். என்று நான் உணர்கிறேன்." என்று சொல்கிறார்.

இதிலிருந்து கடவுளைக் குறித்து நாம் புதியதான ஒன்றை கண்டுபிடிக்கவில்லை என்று அறிகிறோம். நாம் கடவுளைக் குறித்து "கடவுள் நியாயவாதி, சச்சிதானந்தர், கலப்பற்றவர், ஆதிமத்யாந்த ரஹிதர் என்று நாமறிவோம். ஆனால் இம்மாதிரியாக மனிதசமூகம் கடவுளை அறியாதிருந்த காலம் ஒன்று இருக்கவில்லை. பழங்கால ரிஷிகள் கடவுளுக்கு இத்தன்மைகள் இருப்பதாக பாடியிருக்கின்றனர். என்றால் தற்கால வேதாந்திகள் எதை புதியதாகக் கண்டுபிடித்துவிட்டதாக பெருமைகொள்ள முடியும்? நமக்கு மற்ற எல்லாவற்றின் நம்பிக்கைகளும் மாறுபட்டுக்கொண்டு வந்திருக்கலாம், ஆனால் கடவுளைக் குறித்த அறிவோ எப்போதும் மாறுபடாமலே தொடர்ந்துவந்து கொண்டிருக்கிறது. மனிதர்களின் ஆயுட்காலத்தில் மாறுபாடு தோன்றலாம், விஞ்ஞானத்தால் மற்றும்பல அரியகாரியங்களைப் புரியலாம், ஆனால் கடவுளைக் குறித்தோ மனிதன் ஒன்றையும் புதியதாகக் கண்டுபிடிக்க இயலாது. ஏனென்றால் கடவுளின் தன்மைகள் மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டவைகளல்ல.

எல்லாமதங்களும் கடவுள் தன்மைகளை ஓரேவிதமாகக் கொண்டிருப்பதன்றி எதுவும் அது சம்பந்தமான புதியதொன்றைக் கண்டுபிடிக்கவில்லை; இனிமேலும் கண்டுபிடிக்கப்போவதுமில்லை.

புதியதான ஒன்றைக் கண்டுபிடித்தவர்களாகச் சொல்லும் ஆரியர்கள், செமிடிக்கர்கள், சானனிகர்கள் யாருமே உண்மையில் புதியதாக ஒன்றைக் கண்டுபிடித்தவர்களல்லவென்று அறிவாளிகள் சொல்லுகின்றனர். இவர்கள் எல்லோருமே பழையதை புதுப்பித்தவர்களேயன்றி சொந்தக்காரர்களல்லர்.

கன்பியூஷியஸ் (Confucios) :—"நான் பழையதை புதுப்பிக்கின்றேனன்றி புதியதாக ஒன்றையும் கண்டுபிடிக்கிறேனில்லை. நான் பழையவைகளையே நம்புகிறேன்." என்று சொல்வதை மேற்கோளாகக் காட்டி டாக்டர் லெக்கி (Dr. Legge) என்பார் :—"ஆகையால் கன்பியூஷியஸ் ஓர் சீர்திருத்தவாதியேயன்றி சொந்தக்காரர் அல்ல." என்று சொல்லுகிறார். எச். பி. பிளேவெட்ஸ்கி (H. P. Blavatsky.)

"உலக ஆரம்பத்திலிருந்து ஒரு புதிய மதமும் தோன்றியதில்லை." (மேக்ஸ்முல்லர்.)

மேற்கண்டவர்களின் தீர்மானங்களிலிருந்து தற்காலம் காணப்படும் மதங்களெல்லாம் ஒரே மதத்தின் மாறுபாடுகளேயன்றி புதியன வல்லவென்று தெரிகிறது. அவ்வாறே மதத்தின் கர்த்தா கடவுளே.

மதத்தில் எல்லாக் கோட்பாடுகளும் சமதெய்வீக முடையவைகள்தானா? தற்போது உலகிலுள்ள எல்லா மதங்களும் சரியானவைகள்தானா? என்ற கேள்விகளுக்கு ஆம் என்றும் இல்லையென்றும் தான் விடையளிக்கக்கூடும். ஏனென்றால் தற்போதுள்ள எல்லா மதங்களிலும் கடவுளால் கற்பிக்கப்பட்ட மதஉண்மைகளும், மனிதனால் கற்பிக்கப்பட்ட பொய்களும் கலந்தே காணப்படுகின்றன. ஆனால் வெகு ஜாக்கிரதையாக எல்லா மதங்களின் உண்மைகளையும் ஒத்திட்டுப் பார்க்கும்போது அவைகள் எல்லாம் வேதத்திலிருந்து கொள்ளப்பட்ட உண்மைகளே என்பது விளங்கும்.* பொய்க்கொள்கைகளையும் நன்கு ஆராய்ந்து பார்ப்போமானால் வேதத்தின் உண்மைகளையே பலர் பலகாலங்களில் பலவிதங்களாக மாற்றியிருக்கின்றனர் என்பதை அறியலாகும்.

இனி, வேதமே எல்லாமதங்களுக்கும் மூலகாரணம் என்பதை நிரூபிப்போம் :—மதத்தின் தலைமை ஊற்று வேதம். பார்சி, யூத, பௌத்த, கிருஸ்தவ மகம்மதிய மதங்கள் முறையே அதிலிருந்து தோன்றிய கிளை ஊற்றுகளாகும். இவ்வைந்து பெரிய மதங்களையே நாம் ஆராய்வதற்கெடுத்துக்கொண்டோம்.

* ஸ்வாமி தயானந்தர் இயற்றிய "சத்தியார்த்தப்ரகாசம்" பார்க்க.



ஏனென்றால் மற்ற குட்டி மதங்களெல்லாம் இக்கிளை மதங்களிலிருந்து தோன்றியவைகளே. ஜைனமதம் புத்தமதத்திலிருந்து தோன்றியது; கபீர், நானக், தாது மதங்கள் பெரும்பகுதி இந்து மதத்தையும், சிறுபகுதி கிருஸ்தவ மதத்தையும் தழுவித் தோன்றியவைகள். பிரம்மமதம் (பிரம்மசமாஜம்) கிருஸ்தவ, இந்துமதத்தின் கலப்புக்குழந்தையாகத் தோன்றியது. இவ்வாறே தான் மற்ற குட்டி மதங்களும்.

இப்பல மதங்கள் ஏன் தோன்றின? நன்கு ஆராய்ந்து பார்க்கும்போது மதத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்று தன்னலப் புரோகிதர்களால் மாறுபாடடையும் காலங்களிலெல்லாம் மஹான்கள் தோன்றி அதைப் புதுப்பித்திருக்கிறார்கள் என்பது விளங்கும். இவ்வாறு தன் பழைய மதத்தைத் சீர்திருத்தும் நோக்கத்துடன் தோன்றியவைகள் தான் எல்லா புது மதங்களும். உதாரணமாக வேதமதம் தன் உண்மையை இழந்து பலதேவர்களின் வணக்கத்தைப்புரிவதில் சென்றுகொண்டிருந்தபோது அதைத் தடுத்து மறுபடியும் ஒரே கடவுளின் வணக்கத்தை நிலைநாட்டிவந்தார் பார்சி மதத்தலைவரான ஜரதஷ்டிரர். மறுபடி மிருகபலியிடும் மூடக்கொள்கையில் வேதமதம் சென்றுகொண்டிருந்தபோது அதைத்தடுத்து மறுபடி "அஹிம்சா தர்ம"த்தை நிலைநாட்டியவர் பௌத்தர். புத்தர் வேதமதத்தைச் சீர்திருத்தியதுபோல யூதமதத்தை சீர்திருத்தியவர் கிருஸ்து. கிருஸ்துமதம் உருவவழிபாடுகளில் மூழ்கிக் கொண்டிருக்கும்போது அதைத் தடுத்து உருவமற்ற வழிபாட்டில் செலுத்தியவர் மகம்மதுநபி. எல்லாமதத் தலைவர்களும் இம்மாதிரியாகச் செய்தவர்கள்தான். கபீர், நானக், தாது முதலிய எல்லோரும் இதேமாதிரி சீர்திருத்தவாதிகளாயிருந்தனரேயொழிய புதியதொன்றை யாரும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் இவர்களில் ஒருவரேனும் வேதமதத்தை முற்றிலும் பழையபடி சீர்திருத்தினர்களில்லை.

---

# ஹரிஜனங்களும் மதமாற்றமும்

"ஏன் என்பதற்கென் புருடனில்லை. (குழந்தைக்கு) பேரென்ன வைப்பதென்றாள் பெரியம்மாள்" என்பது ஓர் பழமொழி.

முதலில் ஹரிஜனங்கள் ஹிந்து மதத்தை விட்டுச் செல்வதாகவே முடிவு [illegible] ஆனால் இதற்குள் அந்நிய மதத்தினர் செய்யும் ஆர்ப்பாட்டங்[illegible] சொல்லித்தொலையா. இவர்களின் ஆர்ப்பாட்டங்களைக் காணும்போதுதான் [illegible] பழமொழி நினைவிற்கு வருகிறது.

திருவனந்தபுரத்திலே ஓர் மகாநாடு கூடியது. அதற்கு எ. எ. ராமன் என்பார் தலைமை வகித்தார். மகாநாட்டின் கருத்து ஹரிஜனங்களின் மத மாற்றுதலைப் பற்றியதாகும். முதல்முதலில் கே. சி. குட்டன் என்பார் மகாநாடு கூடியதன் காரணத்தை விளக்கிச்சொன்னார். பிறகு தலைவர் தாழ்த்தப்பட்டோர் இஸ்லாம் மதத்தைத் தழுவவேண்டுமென்பது தன் விருப்பம் என்று கூறினார். பிறகு பி. கே. கோவிந்தன் என்பார் கிருஸ்தவ மதத்தைத்தான் அவர்கள் தழுவவேண்டுமென்பது அவர் விருப்பம் என்று கூறினார். பிறகு எ. என். குஞ்சம்பா என்னும் முஸ்லீம் மதத்தலைவர் கிருஸ்தவ, மகம்மதிய மதங்களின் பெருமைகளையெடுத்துப் பேசினார். முடிவில் ஹரிஜனத்தலைவர்கள் கூடி அவர்கள் எந்த மதத்தைத் தழுவவேண்டுமென்பதை ஆராய்ந்து முடிவுசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டபின் கூட்டம் கலைந்தது.

ஹரிஜனங்கள் ஒன்றும் முடிவுசெய்யாதிருக்கும்போதே இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களை ஹரிஜனங்களுக்கு தாங்கள் செய்ய வேண்டுமென்று நினைக்கும் மதத்தின் நன்மை தீமைகளையறியவும், அந்நியமதத்திற்குச் செல்வதால் தாங்கள் அடையக்கூடிய பலன்களையும் அறிந்துகொள்ள ஹேதுவாகின்றன.

மலபார் கிருஸ்தவ மதத்தைச் சேர்வதால் ஒருக்காலும் ஹரிஜனங்கள் தாழ்மையை நீக்கப்பெற்றுக்கொண்டவர்களாக ஆகமாட்டார்கள். ஏனென்றால் இதுவரை கிருஸ்தவ மதத்தைத் தழுவிய ஹரிஜனங்கள் ஒருவித சுகத்தையும் கண்டார்களில்லை. தாங்கள் இருந்த தாய்மதத்தில் எவ்வாறு நடத்தப்பட்டார்களோ அதேமாதிரிதான் அங்கும் நடத்தப்படுகிறார்கள். இந்துக்களாகவிருந்தபோது இருந்த ஜாதிகள் கிருஸ்தவர்களான பிறகும்கூட இருக்கிறது. மேல்ஜாதி கிருஸ்தவர்கள் தாழ்ந்தஜாதி கிருஸ்தவர்களுடன் ஒருவித சம்பந்தமும் வைத்துக்கொள்வதில்லை. கலப்புமணம், சமபந்திபோஜனங்களில் மாத்திரமல்ல, கோவில்களில் உட்காருவதிலும்கூட ஒற்றுமை கிடையாது. ஹரிஜன கிருஸ்தவர்களுக்கு கோவிலில் உட்கார வேறு இடம்தான். மேல்ஜாதி கிருஸ்தவர்களுக்கு வேறு இடம்தான். இப்பேர்ப்பட்ட ஓர் மதத்திற்குச் செல்வதாலே ஹரிஜனங்கள் எப்படி முன்னேற்ற மடைய முடியும்.

இனி மகம்மதிய மதத்தை யெடுத்துக்கொண்டால் அதுவும் ஜாதிப்பாகுபாட்டின் குற்றத்திலேயிருந்து விலகியதாகச் சொல்லமுடியாது. மகம்மதியர்களில் ஷியாஸ், சுன்னீஸ் என்ற இரண்டு பிரிவினர் இருக்கின்றனர். ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினருடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்வ



தில்லை. ஆனால் அதற்குப் பதிலாக ஒருவரையொருவர் வெறுக்கின்றனர். மற்றும் ஆஹரார்—அஹமதியார் என்ற வேறு இரண்டு பிரிவுகள் உண்டு. இவர்கள் இரத்தக்களரி செய்யும்வரை ஒருவரையொருவர் விரோதித்துக் கொள்கின்றனர். இருவரும் திட்டிக்கொள்கின்றனர். இவர்களுக்குள் இருக்கும் விரோதத்தைக்காணும்போது ஜாதி ஹிந்து ஹரிஜன விரோதம் 1000 பங்குக் குறைந்ததாகக் காண்கிறது.

சில தினங்களுக்குமுன் கள்ளிக்கோட்டையில் மௌலானா மஹம்மத்ஹலி ஓர் பொதுக்கூட்டத்தில் கீழ் வருமாறு சொன்னார் :—

மகம்மதியர்கள் தங்களுக்குள்ளேயே பிளவு ஏற்படுத்திக்கொண்டு வருந்தத்தக்க நிலையில் இருக்கின்றனர். இதனால் இஸ்லாமின் நிலை அந்நியர்களுக்கு நன்கு தெரியலாகிறது. உலகமக்களை தங்கள் சமூகத்தினால் பல வழிகளிலும் காப்பாற்றுவதை விட்டு தங்களுக்குள்ளேயே பெரிய சண்டையிட்டுக்கொள்கின்றனர். காதியானி—ப்ஹாய்களின் தொகை இஸ்லாமில் பரவுவதைக் காணும்போது இதற்கென்ன காரணம் என்பதை கண்டுபிடிக்க வேண்டும். அவர்கள் ஒற்றுமையற்றவர்களாய் மாத்திரமில்லை. கொள்கைகளிலும் வித்தியாசம் படைத்தவர்களாயிருக்கிறார்கள். இந்நிலையை மாற்றி ஒற்றுமை படுத்தவேண்டுமானால் "ஆரியசமாஜிகளின்" முறையை நாம் பின்பற்றவேண்டும்.

இப்போது ஹரிஜனங்கள் மகம்மதிய மதத்தைத் தழுவுவதாயின் அதில் எந்தப் பிரிவை அவர்கள் தழுவுவார்கள். ஒரு பிரிவைத்தழுவினால் மற்ற பிரிவினர்களின் விரோதங்களுக்குட்பட நேரிடும்.

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்—எண்ணுவமென்பதிழுக்கு” என்றார் திருவள்ளுவர்.

ஆகையால் ஹரிஜனங்கள் உண்மையில் ஏதாவது மதமாறுதல் செய்ய விரும்பின் ஏதாவதோர் முடிவை யடையுமுன் தீர ஆலோசித்து முடிவுசெய்வார்களாக. அவசரப்பட்டு ஓர் காரியத்தைச் செய்துவிட்டு பின் வருந்துவதில் பயன் யாது?

பொறுத்தவர் பூமியாள்வார்
ஆத்திரக்காரருக்கு புத்தி மட்டு.

என்ற முதுமொழிகளை ஹரிஜனங்கள் நினைவூட்டிக்கொண்டு அதன்படி நடந்து இனிய சுகங்களைப் பெறுவார்களாக.

# உண்மைச் சம்பவக் கதை

**(ஆர்ய வீர்)**

[இத்தலைப்பின்கீழ் ஒவ்வொரு மாதமும் ஒவ்வோர் கதை "ஆர்ய வீர்" என்பவரால் எழுதி வெளியிடப்படும். இத்தலைப்பின் கீழ்வரும் கதைகள் எல்லாம் உண்மையில் நடைபெற்ற சம்பவங்களேயாகும். பெயர், ஊர் முதலியவைகளை மாற்றி சம்பவக் கர்த்தர்களுக்கு வருத்தமின்றி வெளியிடப் படுகின்றன. ஆகையால் வாசகர்கள் இத்தலைப்பின் கீழ் வருபவைகளை ஊன்றி வாசித்து, இந்நிலையில் உள்ளவர்களுக்கு ஹிந்துசமூகம் எவ்வித நடவடிக்கைகளையெடுத்துக்கொள்ளப்போகிறது என்பதை ஆலோசிக்கவேண்டும். இதற்காக ஹிந்து தர்மவாசகர்கள் என்ன முறைகளைக் கையாள வேண்டு மென்று விரும்புகிறார்களென்பதையும் நாம் அறியவிரும்புகிறோம்.

கே. ஞானி.]

## 1. காதலர் கடைசி சந்திப்பு.

நகரெங்கும் தீபாவளிக் கொண்டாட்டம். புது மாப்பிள்ளைகள் மாமியார் வீடுகளுக்கு விருந்துண்ணச் சென்றிருக்கின்றனர். மாமியார்கள் தங்கள் புது மருமகப் பிள்ளைகளை திருப்தி செய்விக்கவேண்டிய முயற்சிகளைச்செய்து கொண்டிருக்கின்றனர். எங்கும் சந்தோஷம். ஆனால் ஒரே விடத்தில் மட்டும்தான் கொஞ்சம் துக்கம் நிலவிக்கொண்டிருக்கிறது.

கமலவேணி வாடிய முகத்துடன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஆலோசித்த வண்ணமிருக்கிறாள். அவள் தாய் பன்முறை அவளை வேண்டியும் அவள் இருந்தவிடத்தைவிட்டு நகரவில்லை. பொழுது சென்று கொண்டேயிருக்கிறது. இரவு ஆக ஆக கமலவேணியின் துக்கமும் அதி கரித்துக்கொண்டே செல்கிறது. எங்கும் நிசப்தம்; எங்கும் காரிருள். கமலவேணி உட்கார்ந்திருக்கும் அறையின் கதவு மெதுவாகத் திறக்கப்பட்டது. ஓர் ஆணுருவம் கமலவேணியின் எதிரே வந்து நின்றது. அதைக் கண்டவுடன் திடீரென்று எழுந்த கமலவேணி:—"அடே தூர்த்தா! நாசகாலா! என் வாழ்வைக் கெடுத்த கொடும் பாதகா! எங்கு வந்தாய்? இன்று மாலை நீ அனுப்பிய கடிதம் கண்ட பிறகுதான் உன் எண்ணம் வெளியாயிற்று. அநியாயமாக ஓர் பெண்ணின் வாழ்வைக் கெடுத்த பாபம் உன்னைச் சும்மா போகாது. இப்பொழுதாவது என்னைக் காப்பாற்றுவதாக [illegible]



செய்த எல்லாக் குற்றத்தையும் மறந்து விடுகிறேன். என்ன சொல்கிறாய்?" என்றாள்.

வாலிபன்:—பெண்பாவாய்! என்மேல் கோபம் கொள்ளவேண்டாம். நான் செய்தவை யனைத்தும் பிசகென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். உன்னைக் காப்பாற்றவேண்டுமென்பது என் மனப் பூர்வமான விருப்பம்தான். ஆனாலும் என் பெற்றோர்கள், என் ஜாதியார்கள் என்னைத் தூஷிப்பார்கள், ஜாதியைவிட்டு விலக்கிவிடுவார்கள் என்பதற்குத்தான் அஞ்சுகிறேன். இல்லாவிட்டால்......

**கமலவேணி**:—சரிசரி, நிறுத்தையா! போதும் உம் உபசாரம், உம் உதவி எனக்கொன்றும் தேவையில்லை. நீர் வந்தவழியைப் பார்த்துக்கொண்டு செல்லும். படைத்த கடவுள் காப்பாற்றாமல் விட்டுவிடமாட்டார். சரி, இனி என் முன் நில்லாதேயும். போம். இன்றேல் உம்மை அவமானத்திற் குள்ளாக்குவேன்.

வாலிபன்:—கமலா! இவ்வாறு சொல்லாதே! நான் ஓர் உபாயம் சொல் கிறேன் கேள். அதனால் நம்மிருவருக்கும் நேரும் அவமானம் ஒழியும். :

**கமலவேணி**:—ஆம், ஆம், கொலை, சிசுக்கொலை! ஐயோ! வேண்டாம், வேண்டாம். அத்தொழிலை என்னால் செய்யமுடியாது. இனிமேல் இங்கிருந் தால் கட்டாயம் உம்மை அவமானமடையச் செய்வேன். செல்லும், உம் புத்திமதி ஒன்றும் எனக்குத் தேவையில்லை.

## 2. விருத்தாந்தம்.

சென்னைக்கடுத்துள்ள மங்களகிரியெனும் ஓர் பெரிய கிராமத்தில் குமார சுவாமியென்னும் ஓர் பெரியார் வசித்துவந்தார். அவர் மனைவி மாணிக்கம் மாள் மூலமாக அவருக்கு 2 ஆண் குழந்தைகளும் ஓர் பெண்குழந்தையும் பிறந்திருந்தது. அந்த கிராமத்திற்கடுத்த நயனப்பட்டியெனும் கிராமத்தில் ராமநாதன் எனும் ஓர் பண்ணை வசித்திருந்தான். அவனுக்கு ரங்கநாதன் யெனும் ஓர் புத்திரன் உண்டு. குமாரசுவாமியும் ராமநாதனும் பழங்காலத் திலிருந்து அத்யந்த நண்பர்களாய் இருந்தார்களாகையால் ராமநாதனின் மகனான ரங்கநாதன் அடிக்கடி குமாரசுவாமியின் வீட்டிற்குச்சென்று விளையாடி யிருப்பது வழக்கம். சில சமயங்களில் அங்கேயே சாப்பிட்டுவிட்டுப் படுத்துத் தூங்குவதும் வழக்கம்.

கமலவேணியும், ரங்கநாதனும் பல காலங்களில் தனியாக விளையாடு வதுண்டு. ஒருவர்மேல் ஒருவர் அன்புகொண்டிருந்தனர். நாளாவட்டத்தில்

அவ்வன்பு காதலாக மாறத் தொடங்கியது. காலாகாலத்தில் கமலவேணியும் பருவமடைந்தாள். பருவமடைந்த சில நாள்வரை ரங்கநாதன் பார்வைக்குத் தென்படாமலிருந்து வந்தாள். ஆனாலும் சில தினங்களுக்குப் பின் பழைய படியே இருவரும் கலந்து விளையாட ஆரம்பித்தனர். கமலவேணியின் பெற்றோர் இதை நன்கு அறிந்தனராயினும் தம் பழைய நண்பரின் புதல்வன் என்ற முறையில், இளம் பெண்களும் ஆண்களும் சேர்ந்து விளையாடுவதாலுண்டாகும் தீங்குகளை அறியாதவர்களாகையால் அவர்களின் நட்பைப் பிரிக்க முயற்சி செய்தார்களில்லை.

அந்தோ! இப்போதுதான் கமலவேணியின் நிலை சொல்லமுடியாததாகி விட்டது. எவ்வளவு தினங்கள்தான் அதை மறைத்துவைக்கமுடியும். கடைசியாக கமலவேணியின் தாயார் தன் மகள் கர்ப்ப முற்றிப்பதைக் கண்டுவிட்டாள். அவ்வளவுதான். அவளுக்கெழுந்த கோபமும், துக்கமும் எழுகடல்களையும் வற்றச்செய்யக்கூடியனவாய் இருந்தன. ஆனால் கோபத்தால் ஓர் பலனும் கிடைக்காது என்பதை அறிந்த அவ்வம்மாள் தருந்த சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். தன்தாயார் தன் ரகசியத்தை அறிந்துகொண்டார் களென்பது கமலவேணிக்குத் தெரியவும் அவள் மனம் நெருப்பில் விழுந்த புழுப்போல் தத்தளித்தது. தனக்கு இவ்வளவு துன்பத்தை உண்டாக்கக் காரணமாயிருந்த ரங்கநாதனைக் காண பன்முறை முயற்சித்தாள். அது வீணாயிற்று. தீபாவளி நெருங்கிற்று. அன்று மாலை ரங்கநாதனிடமிருந்து ஓர் கடிதம் கமலவேணிக்குக் கிடைத்தது. அதில் :—

காதலி! இப்போதெல்லாம் நீ எப்படி வருந்துவாய் என்பதை நான் அறிவேன். ஆயினும் பல காரணங்களால் உனக்கு உதவிசெய்ய நான் அசக்தனாயிருக்கிறேன். நான் சொல்லும்படிச் செய்தாயானால்தான் தப்ப வழியுண்டு. அதாவது நாளைக் காலை நான் ஓர் ஆளை அனுப்புகிறேன். ஒன்றும் பேசாமல் நீ அவனுடன் புறப்பட்டுவரவேண்டும். பிறகு நடக்க வேண்டிய காரியம் சுருக்கமாகச் சொல்கிறேன். குழந்தை பிறக்கும்வரை ஓர் தனியிடத்தில் வைக்கப்படுவாய். பின் குழந்தையைக் கொன்று — — — நீ எங்கோ சென்றிருந்ததாகச் சாக்கு சொல்லி மறுபடி நீ வீடு போய்விடுவது. இத்தீர்மானம் உனக்குச் சம்மதமா இல்லையா என்பதை அறிய இன்று இரவு நான் உன்னைக் காண வருகிறேன். தீர ஆலோசித்து வைக்கவும்.

இப்படிக்கு உன் துர்பாக்யக்கார காதலன்,

ரங்கநாதன்.

இக்கடிதத்தைக் கண்ட கமலவேணியின் நிலை எவ்வாறிருக்குமென்பதை வாசகர்களே அறிந்துகொள்ளலாகும். அதே இரவுதான் 1வது அத்தியாயத்திற் கண்ட சம்பாஷணை நிகழ்ந்தது.

கமலவேணியின் நிலையை நன்கு அறிந்த அவளின் தாயார், இனியும் அவளை வீட்டில் வைத்திருந்தால் பெரிய ஆபத்தாக முடியும் என்பதை அறிந்து அதற்கான வழியைத் தீர்மானம் செய்துகொண்டாள்.

## 3. அடைக்கலம்.

சென்னை சென்ட்ரல் ரயில்வேஸ்டேஷனுக்கருகாமையில் கமலவேணி வடியும் கண்ணீருடன், பிச்சைக்காரிபோல் எங்குசெல்வதென்று தெரியாதவளாக மெதுவாக சென்றுகொண்டிருக்கிறாள். மனதிற்குள் "ஆ! ஈசா! இதற்கோ என்னைப் பிறப்பித்தாய்! நண்பர் வீட்டிற்குச் சென்று வரலாம் என்று சொல்லி ஏமாற்றி என் தாய்—என்னைப்பெற்று வளர்த்த தாய்—என்னை இக்கதிக்காளாக்கிச் சென்றனளே! இனி யென்செய்வேன்! எங்கு செல்வேன்!" என்று சிந்தித்துக் கொண்டே தள்ளாடுகிறாள். இதே சமயம் அவளுக்குப் பின்புறத்திலிருந்து ஹிந்துக்களல்லாத சில துஷ்டர்கள் அவளை நோக்கி பலவித மன வார்த்தைகளாடிக்கொண்டு அவளைத் தொடர்ந்துவந்து கொண்டிருக்கின்றனர்.

மாலைவேளை, இருட்டு ஆரம்பம். வாராவதியின் அடிவரை வந்ததும் கமலவேணி அதற்குமேலும் நடக்க முடியாமல் உட்கார்ந்துவிட்டாள். அதே சமயம் இவளை தொடர்ந்து வந்துகொண்டிருந்த இருதுஷ்டர்களும் அவளை யணுகி, கேலி வார்த்தைகளாடிக்கொண்டே அவள்மேல் கையைப்போட யெத்தனித்தனர்.

பள பளப் பளார் என்று அத்துஷ்டர்களின் முதுகுகளில் அடிகள் விழுந்தன. அவர்கள் திரும்பிப்பாராமல் ஓட்டம் பிடித்தனர். கமலவேணியின் எதிரில் அன்பும் சாந்தமும் உருக்கொண்ட ஓர் பெரியார் நிற்கிறார். திடீரென்று தனக்குவந்த ஆபத்து நீங்கக்கண்ட கமலவேணி அப்பெரியாரின் கால்களைப் பிடித்து காப்பாற்றும்படி வேண்டினாள். கருணையே உருவான அவ்வாரியர் அவளை ஓர் வண்டியில மர்த்தி அழைத்துச் சென்றார்.

இராயபுரம் ஆஸ்பத்திரியில் சுபதினத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்ற நம் கமலவேணி சில தினங்களுக்குப் பின் ஆரிய சமாஜத்தின்பாதுகாப்பில் ஓர் ஆரியர் வீட்டில் தன் குழந்தையுடன் இருந்துவருகிறாள்.

வாசகர்களே! இப்பெண்மணியை நாம் என் செய்வது? இப்பேர்ப்பட்ட நிலையில் உள்ள இவளுக்கு எம் முறையை கைக்கொள்ளவேண்டுமென்று ஹிந்துமதம் வற்புறுத்துகிறது? யுக்தி, நியாயச் சம்மதமாக இவளை நாம் என்ன செய்யலாமென்று உங்கள் அபிப்பிராயத்தை தெரிவிப்பீர்களாக.

# சென்னை ஆர்ய சமாஜத்தின்

## மாதாந்திர நடவடிக்கைகள்.

**நகரப்பிரசாரம்:**—ஆர்ய சமாஜத்தின் முக்ய உத்தேசம் "பிரசாரம்" என்றால் தங்களின் சித்தாந்தங்களை எல்லோருக்கும் விளக்கிக் காட்டுதல்.

தற்சமயம் சென்னையில் நான்கு சமாஜங்கள் இருக்கின்றன. 1:—சைனா பஜாரில் தலைமை ஸ்தாபனம், 2:—திருவல்லிக்கேணி, 3:—புளியந்தோப்பு, 4:—பெரம்பூர்.

தலைமை சமாஜத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் உபதேசம் நடைபெறுகிறது. திருவல்லிக்கேணியில் சனிக்கிழமைகளில் மாலை 6½ முதல் 8 வரையும், புளியந்தோப்பில் சனிக்கிழமைகளில் மாலை 6½ முதல் 8 வரையும், பெரம்பூரில் வியாழக்கிழமைகளில் மாலை 6½ முதல் 8 வரையும் பிரசங்கங்கள் நடைபெறுகின்றன. இது தவிர பிரதி ஞாயிறு, வெள்ளிக்கிழமைகளில் முறையே திருவல்லிக்கேணி, ஹைகோர்ட் கடற்கரையில் மாலை 6½ முதல் 8 வரை பொதுப்பிரசாரங்கள் நடைபெறுகின்றன. ஆனால் சில காரணங்களால் ஹைகோர்ட் கடற்கரைப் பிரசங்கம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

**வெளியீடுகள்:**—சென்னை சமாஜத்தில் இருந்து "ஹிந்து தர்மம்" என்னும் மாதப்பத்திரிகை வெளியாகிறது. இது தவிர மாதா மாதம் அநேக துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன.

சில தினங்களுக்கு முன் சென்னையில் உள்ள சில கிருஸ்தவர்கள் ஆரிய சமாஜத்தார்களை 12 கேள்விகள் கேட்டு ஓர் துண்டுப்பிரசுரம் வெளியிட்டிருந்தனர். அதற்கு விடையாக சமாஜத்தார் 5000 பிரதிகளை வெளியிட்டிருக்கின்றனர். இதில் கிருஸ்தவமதத்தின் குறைவுகளையும், ஆர்ய மதத்தின் உயர்வுகளையும் நன்கு காணலாம். இதை வேண்டியவர்கள் சமாஜங்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**விதவை மணங்கள்:**—ஆர்ய சமாஜத்தின் பல கொள்கைகளில் பால்ய விதவைகளுக்கு மணம் புரிவித்தலும் ஒன்றாகும். இதன் சார்பாக சில தினங்களுக்கு முன், ப்ரஹ்லாத் எனும் ஓர் பஞ்சாபிய வாலிபருக்கும், [illegible] யெனும் அல்லாடி குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளம் விதவைக்கும் மணம் [illegible] பெற்றது. மற்றொன்று ஆந்திர நாட்டைச்சேர்ந்த நன்கு கல்விகற்ற பண்டித ராமசுப்ரமண்ய சாஸ்த்ரியாருக்கும் பால்ய விதவை சேஷம்மாளுக்குமாகும். இன்னும் இந்து தர்ம வாசகர்கள் எங்காவது பால்ய விதவைகள் மணம்புரிய சகாயம் வேண்டினால் தயவுசெய்து சமாஜத்திற்குத் தெரிவிக்கவும்.

**ஹரிஜன பிராம்மண சம்பந்தம்:**—சில தினங்களுக்கு முன் குண்டூரில் பண்டித சே. ஞானியவர்களால் லீலா யெனும் ஹரிஜனப் பெண்மணிக்கும் ராமானுஜசாரி யெனும் பிராம்மண வாலிபருக்கும் விவாகம் செய்து வைத்தார். இதிலிருந்து ஆர்யசமாஜம் ஜாதிக்கட்டுப்பாட்டை ஒழிப்பதாலும், கலப்பு மணங்கள் செய்வதாலும் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கிறதென அறியலாகும்.

**சுத்தி:**—இதுவரை ஆர்ய சமாஜம் சென்னை மாகாணத்திலும் ஆந்திர நாட்டிலும் சேர்த்து சுமார் 1400 கிருஸ்தவ, மகம்மதியர்களை இந்து மதத்திற் சேர்த்துக் கொண்டிருக்கிறது. இதிலும் பெரும்பான்மையோர் கிருஸ்தவர்கள், சிறுபான்மையோர் மகம்மதியர்களாவார்கள். இதில் சுமார் 1200 பேர்கள் குண்டூர் பிரதேசங்களிலிருந்து சுத்தியாக்கப் பட்டவர்கள். மற்றவர்கள் சேலம் முதலிய தமிழ் நாடுகளிலிருந்து சுத்தியானவர்கள்.

ஹிந்து தர்ம வாசகர்கள் எங்காவது அந்நிய மதத்தினர் இந்து மதத்தைத் தழுவ விருப்பம் கொண்டிருப்பதைக் கண்டால் உடனே எமக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலே வேண்டிய நடவடிக்கைகளை ஆர்ய சமாஜம் எடுத்துக்கொள்ளும்.

### மணமகன் தேவை.

ஆர்ய சமாஜத்தில் பல காரணங்களால் அநாதியாக விடப்பட்ட இளம் பெண்மணிகள் ஆதரவளிக்கப்படுகின்றனர். அவ்வாறாக தற்சமயம் இரண்டு பெண்கள் ஆரிய சமாஜ உதவியால் மணம் செய்து கொள்ளத்தயாராயிருக்கின்றனர். அவர்களை மணம் புரிந்து கொள்ள சம்மதிப்போர் முழுவிவரங்களையும் சமாஜத்திற்கெழுதி தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பம் செய்வோர் சிறிது கல்வி உடையவராயும், சம்பாத்தியம் உடையவராயுமிருக்க வேண்டும்.

| | |
|---|---|
| ஓர் பெண்மணியின் வயது | 15 |
| மற்றோர் பெண்மணியின் வயது | 18 |

ஆரியசமாஜம்,
சென்னை.

## "ஹிந்து தர்மம்" சஞ்சிகைகள் கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்.


1. K. N. சங்கரம் பிள்ளை,
புரொப்ரைட்டர், லக்ஷ்மி விலாஸ், ஆர்ட் பிரஸ் ஸ்டோர்ஸ்
நெ. 281, 2-வது டிவிஷன், மட்டக்குளி, கொழும்பு
2. C. N. நாராயணன்,
நியூஸ் ஏஜண்ட், தமிழ் நாடு புத்தகசாலை,
ராஜா தெரு, கோயம்புத்தூர்.
3. P. R. துரைசாமி அய்யர்,
சௌத் இண்டியன் நியூஸ் ஏஜண்ட், திருப்பூர். (S.I.Ry.
4. K. R. முனியாண்டி & பிரதர்ஸ்,
நியூஸ் ஏஜண்ட் & தினசரி பத்திரிகை வியாபாரி,
வடக்கு சித்திரை தெரு, மதுரை.
5. A. பாலகிருஷ்ணசாமி,
சிலோன் நியூஸ் ஏஜன்ஸி,
நெ. 199—193, கோர்ரின்ஸ் ரோட், கொழும்பு.
6. V. B. சாஸ்த்ரி,
புரொப்ரைட்டர், ஜெனரல் நியூஸ் ஏஜென்ஸி,
244, பாஸி தெருவு, ரங்கோன்.
7. கோபால் அண்டு கோ.,
201, செராங்கூன் ரோட், சிங்கப்பூர்.
8. K. S. V. சுப்பையா,
காந்தி புத்தகசாலை, 70, மொகல் தெருவு, ரங்கோன்.

162215

*THE CHEAPEST AND BIGGEST HOUSE FOR :—*
WHOLESALE AND RETAIL DEALINGS.

# KASHMEER SPECIAL PULAV RICE

USE



ALWAYS

Register No. 2439.

*Specially For :—* **MARRIAGES, DINNERS, and HOTELS.**

MANGAL PROVISION STORES.

PROP: **PHOOLCHAND BHIKALAL,**

**GHEE, PULAV RICE, SUGAR, FLOUR, WHEAT, and GENERAL MERCHANTS.**

***2/138 Audiappa Naicken St., G.T. Madras.***

**BEWARE OF IMITATIONS.** Please note that each of our Pulav Rice Paper Bags and Gunny Bags bearing our Regd. No. 2439. with "Cresent and Flag" Trad Mark, and our Kashmeer Special Pulav Rice are available everywhere.


***A TRIAL WILL CONVINCE YOU.***

புதிய சரக்கு! மேலான ரகம் !!

காஷ்மீர் ஸ்பெஷல் பொலவ் அரிசியை எப்போதும் உபயோகியுங்கள். ஒவ்வொரு காகித உறைகளின்மீதும் சாக்குப்பைகளின் மீதும் எங்கள் "சந்திரப்பிறை கொடி" மார்க்கும் ரிஜிஸ்டர் நெ. 2439 இருப்பதை கவனித்து வாங்கவேண்டுகிறோம். ஒரு தடவை உபயோகிக்க உண்மை விளங்கும். உத்தரவாதமுள்ளது

# சுதேசி சோடா பவுண்டன்கள்.

## ஏன் ராஜூ சோடா பவுண்டன்களையே வாங்கவேண்டும்?




1. உலக்கைத் தாறுகளே வடிகட்டும் சோடா மிஷின்களில் அதிக மேன்மையுள்ளது.

2. நுட்பமாக செய்யப்பட்டதால் குழந்தைகளும் கையாளுவதற்கு சுலபமானது.

3. ஐஸ்பாடாயிலே யெல்லா பானங்களும் மும்முறை ஐஸ் குளிர்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

4. வாசனையுள்ள அநேக விதமான பானங்களில் விலை வெகு அற்பமானது.

5. மெஷின் கையாளுவதில் சிலவே இல்லை என்றதோடு சோடா தண்ணீரின் விலையும் அதிக அற்பமே.




இந்தியாவில்
இந்தியர் பணத்தி
னால் இந்திய
சகோதரர்களி
னாலும்
செய்யப்பட்டது.

ராஜா சோடா
மிஷின்களாகும்

மிஷின்களை செய்து விற்பவர்கள் :—

**ஏ. ஜி. ராஜூ அண்டு கம்பெனி,**
**2/64 சாமி நாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.**